
www.padippakam.com

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 122 மே 2001 விலை ரூ.7/-

## மே நாள் வெல்க !



மார்க்சு



எங்கெல்ஸ்

**தேசம்**, மதம், சாதி என்கின்ற தேசிய உணர்ச்சிகளை மறந்து, உலகத் தொழிலாளர் எல்லாம் ஒரே சமூகமாய் ஒன்றுபட்டு எல்லா தேச, மத, சாதி மக்களுக்கும் வாழ்க்கையில் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படி கொண்டாட வேண்டும் என்றும்; தொழிலாளர் சம தர்ம இராஜ்யம் ஏற்பட வேண்டும் என்னும் ஒரே அபிப்பிராயம் ஏற்படும்படி தொழிலாளர்களிடையில் பிரச்சாரம் செய்யவும், வேறு சாதகங்கள் பெறவும் இம்முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

— ஈ.வெ.இரா

**‘எல்லாமே விற்பனைக்குத் தான் !’ சாவூருக்கு விரட்டுகிறது அரசு !**

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

### தலையங்கம்


* 'எல்லாமே விற்பனைக்குத் தான்!' சாவூருக்கு விரட்டுகிறது அரசு! - வே.ஆனைமுத்து 1

துணைத் தலையங்கம்
'சிந்தனையாளன்' எடு 5


### கட்டுரைகள்


* ஈழ விடுதலை வந்து சேர ஈழத் தமிழரும் தமிழகத் தமிழரும் என்னென்ன செய்ய வேண்டும்? ஏன்? - வே.ஆனைமுத்து 9
* ஜனநாயகம் - ஈ.வெ.இரா. 13
* காவியமாக்கப்படும் கல்வித்துறை : கல்லூரிகளில் சோதிட விஞ்ஞானக்கல்வி' - க.முகிலன் 14
* ல்தகா - சைஆ-வில் வாஜ்பேயி அரசு -ஓலைப்பட்டி கந்தையா 18
* எச்சரிக்கிறேன் - ஈ.வெ.இ ரா. 22
* மானமும் அறிவும் உள்ள தமிழா! 'ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழியாத' தமிழைப்படி! தமிழையே எங்கும் பாடு! வே.ஆனைமுத்து 24


### கவிதை


* மே நாள்
இனி சொல்லப் பழகுவோம் -தமிழேந்தி 22



**சிந்தனையாளன்**

(தமிழ் மாத இதழ்)

தனி இதழ் ரூ.7

ஓர் ஆண்டுக் கட்டணம் ரூ.80

வாழ்நாள் கட்டணம் 1.5.2000 முதல்ரூ.1000

* 1.5.2001க்குப் பிறகு புதுப்பிக்கிற பழைய உறுப்பினர்களும், புதிய உறுப்பினர்களும் ரூ.80 உடனே அனுப்புங்கள்.
* 2001 மே வரையில் கட்டணம் செலுத்தாத உறுப்பினர்களுக்கு, ஜுன் முதல், இதழ் அனுப்புவது கட்டாயம் நிறுத்தப்படும்.
* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை அனுப்புங்கள்.

இன்றே சந்தா செலுத்துங்கள்!
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!

பணம், டி.டி. அனுப்பிட
**'சிந்தனையாளன்'**
**SINTHANAIYALAN**
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.
தொலைபேசி: 852 28 62.




## மே நாள்

சுயமரியாதை வீரர்களே! சமதர்மிகளே!! தொழிலாளர்களே! தொழிலாளர்களின் தோழர்களே! இந்த வருஷத்தில் மே தினத்தை மே மாதம் முதல் தேதியில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள நகரங்கள் தோறும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களைத் திரட்டி வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டுகிறேன்.

தேசம், மதம், சாதி என்கின்ற தேசிய உணர்ச்சிகளை மறந்து, உலகத் தொழிலாளர் எல்லாம் ஒரே சமூகமாய் ஒன்றுபட்டு எல்லா தேச, மத, சாதி மக்களுக்கும் வாழ்க்கையில் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் கிடைக்கும்படி கொண்டாட வேண்டும் என்றும்; தொழிலாளர் சம தர்ம இராஜ்யம் ஏற்பட வேண்டும் என்னும் ஒரே அபிப்பிராயம் ஏற்படும்படி தொழிலாளர்களிடையில் பிரச்சாரம் செய்யவும், வேறு சாதகங்கள் பெறவும் இம் முயற்சியில் ஈடு பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஈ.வெ.இரா

('குடிஅரசு' அறிக்கை - 28.4.1935)


மொழி, இன மேம்பாடு, பெண்ணியம்
மனிதநேயம் பற்றிய படைப்புகளோடு
வெளிவரும் தனிச்சுற்று இரு திங்களிதழ்!

**நாளை விடியும்**

ஆசிரியர்: பி.இர. அரசெழிலன்

முகவரி:
நாளை விடியும், 4/7, முருகன் இல்லம்
பாரதிபுரம் முதல் தெரு, கைலாசபுரம் (அஞ்),
திருச்சிராப்பள்ளி (மா) - 620 014
ஆண்டு நன்கொடை: உரூ.25/-
வாழ்நாள் நன்கொடை: உரூ.;250/-.


**2001 ஜுன் 9-10 சனி, ஞாயிறு**
**சமதர்ம சாதி ஒழிப்பு மாநாடு**

இடம்: நகராட்சி மேநிலைப் பள்ளி வளாகம்
பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை

*பெரியார் சிந்தனையாளர் மன்றம்*
*மயிலாடுதுறை*

பெரியார் இயக்கப் பேராளர்கள் அனைவரும் பங்கேற்கிறார்கள். தவறாது கலந்து கொள்வீர்!


www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்ஸ் லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்கள்



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் நெருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

### கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்

- மார்க்ஸ் - எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!

- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!

- பெரியார்

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**
வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை மே 2001
விலை ரூ.7/-

# சிந்தனையாளன்

சுவடி : 23 மாத இதழ் ஏடு : 9

## 'எல்லாமே விற்பனைக்குத் தான்!' சாவூருக்கு விரட்டுகிறது அரசு!

மனிதன் உயிர்வாழ என்னென்ன இன்றியமையாது வேண்டும்? காற்று, தண்ணீர், உணவு இம்மூன்றும் வேண்டும்.

காற்றும் தண்ணீரும் இயற்கையாகவே கிடைப்பவை. இவை இனிமேல் அப்படிக் கிடைக்காது. ஏன்? உலக மயமாக்கல் என்கிற கொள்கைப்படி, இனி, இவற்றை விலைக்குத்தான் எல்லோரும் வாங்க வேண்டும். "தண்ணீர் ஒரு விற்பனைப்பண்டம்."

மனிதன் நலமாக வாழ என்னென்ன வசதிகள் வேண்டும்? கல்வி, வைத்தியம், போக்குவரவு வசதி, வேலை வாய்ப்பு இவை வேண்டும். இவற்றில் எதுவும் இயற்கையாகக் கிடைப்பது இல்லை. இவை எல்லாவற்றையும் தந்திட அந்தந்த நாட்டு அரசு உறுதியும், உத்தரவாதமும் தரவேண்டும். அரசு அப்படித் தரக்கூடாது. அதற்குப் பதிலாக இவற்றை 'விற்பனைக்கு மட்டுமே கிடைக்கிறவைகளாக' அரசு மாற்றிவிட வேண்டும். உலக வணிக அமைப்பின் நோக்கமும் திட்டமும் இவைதான்.

இப்படி முடிவு செய்யப்படுவது அந்தந்த நாட்டு மக்களுக்குத் தெரியுமா? தெரியாது. அந்தந்த நாட்டு நாடாளுமன்றங்களில், சட்ட மன்றங்களில், உள்ளாட்சி நிறுவனங்களில் இதுபற்றிப் பேசவோ, விவாதிக்கவோ செய்தார்களா? இல்லை.

இப்படி உலக வணிக அமைப்பு என்கிற (W.T.O.) நிறுவனத்தால் உலகம் முழுவதிலும் உள்ள வளரும் நாடுகளின் பேரில் - ஏழை நாடுகளின் பேரில் தன் மூப்பாகத் திணிக்கப்படுவதுதான் இப்போது நடக்கிறது.

இதை நாம் எப்படி உணருவது?

படிப்பகம்

www.padippakam.com





பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வேண்டும் என்றால், மக்களுக்கு இலவசமாக அதைத் தருகிற ''கடமையை'' அல்லது ''பணியினை'' (Service) அரசு செய்யக்கூடாது. இப்போது அரசு அப்படிச் செய்து வந்தால், அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும். ''நல்ல தண்ணீரை விலைக்கு வாங்கித் தான் குடிக்க வேண்டும்.''

அதனால் தான், நம் மக்களில் சிலர் 1 ரூ, 5 ரூ, 10 ரூ, 15 ரூ, 20 ரூ என்று விலை தந்து, இப்போது 'நல்ல தண்ணீர் வாங்கிக்' குடிக்கிறார்கள். இப்படி வாங்கிக் குடிக்க வசதியுள்ள சிலர் குடிக்கிறார்கள். இது எல்லா மக்களாலும் முடியாதது. ஆனாலும் இந்தப் பொறுப்பை அரசு எடுத்துக் கொள்ளக்கூடாது.

கல்வியை அரசு தான் எல்லோருக்கும் தரவேண்டும்; அதுவும் இலவசமாகத் தரவேண்டும். ஆனால் எந்த அரசும் - எந்தத் தனியாரும் ''கல்வியை விலைக்குத் தான் விற்க வேண்டும்.'' அதனால் தான் மழலை வகுப்பு, முதல் வகுப்பு தொடங்கி, பொறியியல், தொலைத் தொடர்பு, மருத்துவம் என்கிற ஒவ்வொரு படிப்புக்கும் - ரூ. 5,000; 10,000, 1 இலட்சம், 2 இலட்சம், 10, 15 இலட்சம் என்று ஒவ்வொரு பிள்ளைக்கும் நன்கொடை - விலை - கையூட்டு தருகிறார்கள்; படிக்க வைக்கிறார்கள். இதற்கு வசதியுள்ளவர்கள் கல்வி பெறுகிறார்கள்.

மற்றவர்களுக்கு இது கிடைக்காது. ஆனாலும் கல்வியை எந்த அரசும் இலவசமாகத் தரக்கூடாது.

அதே போல்தான், வைத்தியம் இலவசமாகத் தரப்படுகிற வேலையையும் அரசு செய்யக் கூடாது. மலைக்காய்ச்சல், காச நோய், புற்று நோய், எய்ட்ஸ் என்கிற எப்படிப்பட்ட உயிர்க்கொல்லி நோயாக இருந்தாலும் அதற்குரிய ''வைத்தியம் பணத்துக்குத்தான் விற்கப்படவேண்டும்.''

இப்படிப்பட்ட தண்ணீர், கல்வி, வைத்தியம் என்கிற அடிப்படைத் தேவைகளைக் கொடு என்று, மக்கள், அரசுகளைக் கேட்கக் கூடாது; கேட்டாலும் அரசுகள் கொடுக்கக்கூடாது.

இந்தியாவில் உள்ள மக்கள் 100 கோடிப் பேர். இவர்களில் எவ்வளவு பேர் இந்த அடிப்படைத் தேவைகளை ''விலைக்கு'' வாங்க முடியும்? ஏன் அப்படி வாங்க வேண்டும்? தமிழ் நாட்டு மக்கள் 6 கோடிப் பேர். இவர்களில் எத்தனை இலட்சம் பேர் இவற்றை ''விலைக்கு'' வாங்க முடியும்? முடியாது; முடியாது.



**இப்படிச் சிந்திப்பதும், இவற்றை மக்கள் ஏன் விலைக்கு வாங்க வேண்டும் என்று கேட்பதும் தான் 'அரசியல்'. இவற்றை எல்லா மக்களுக்கும் இலவசமாகத் தரக்கூடிய ஓர் அரசை — ஓர் அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்பது தான், அரசியல்.**

இது நம் மக்களில் 100க்கு ஒருவருக்குக் கூடப் புரியவைக்கப்படவில்லை. இவையெல்லாம் மக்களுக்கு அரசினால் தரப்பட வேண்டியவை; இவற்றைத் தரும்படிக் கேட்பது மக்களுக்கு உள்ள அடிப்படை உரிமை.

ஏன்? மக்கள் தாம் உழைக்கிறார்கள்; செல்வத்தை உருவாக்குகிறார்கள். மக்கள் தாம் வரி செலுத்துகிறார்கள்; இதைச் செய்யாத திருடர்கள் 10% பேரே. மேலும் மக்கள் தாம் வாக்களிக்கிறார்கள்; போருக்கு வீரர்களைத் தருகிறார்கள்.

இப்படியெல்லாம் இருந்தாலும் இவர்களுக்கு இவற்றைத் தரக்கூடாது என்பதுதான் உலக வணிக மயம் - தனியார் மயம் என்பதன் நோக்கம்.

தண்ணீர், மின்சாரம் இவற்றை விற்பனைப் பண்டங்களாக மாற்றுகிற வேலையை - இதற்காக உலகமெங்கும் நுழைந்து செயல்படுகிற 'என்ரான்', 'சூயஸ்', 'விவேண்டி' பெக்டல், ஜெனரல் டி ஈக்ஸ் என்கிற பெரிய பெரிய வணிக நிறுவனங்களை எங்கே வேண்டுமானாலும் நுழையவிட்டு விட்டார்கள்.

'என்ரான்' என்பது மின்சாரம் உற்பத்தி செய்கிற தொழிலையும், மின்சாரத்தை விற்பனை செய்கிற தொழிலையும் இந்தியாவில் மகாராட்டிர மாநிலத்தில் தொடங்கிவிட்டது. அவர்கள் உற்பத்தி செய்கிற மின்சாரம் வாங்கப்படவும், அதை விற்பனை செய்வதால் வரவேண்டிய பணத்தைத் தவறாமல் தரவும் (Counter guarantee) மாநில அரசு ஒப்பந்தம் போடவேண்டும். அப்படி ஒப்பந்தம் போட்டு, மின்சாரம் வாங்கிய கணக்கில், 31.12.2000 வரையிலான பாக்கி ரூ. 152 கோடியை மராட்டிய அரசினால் தரமுடியவில்லை. இதை இப்போது இந்திய அரசு தந்துவிட்டு, மராட்டிய மாநிலத்துக்குத் தருகிற நிதியிலிருந்து அதைக் கழித்துக் கொள்ளப்போகிறது.

இனிமேல், இந்தியாவில் எங்கே மின்சாரம் உற்பத்தியானாலும் இது வேளாண்மை செய்கிற வருக்கோ, சிறு

படிப்பகம்

www.padippakam.com



தொழில் நடத்துகிறவருக்கோ, வீட்டில் விளக்கு எரிக்கவோ குறைந்த விலையில் கிடைக்காது.

நம் நாட்டு மூலப் பொருளை எடுத்து, முதல் கட்ட வேலைக்கு ஒப்பந்தக் கூலிகளாக இந்தியர்களை வைத்துக் கொண்டு, மின்சார உற்பத்தியைத் தொடங்கி, இது விற்பனைக்கு வரும்போது, "இந்தியர்களுக்கு உயர்ந்த விலைக்கு மட்டுமே மின்சாரத்தை விற்பது" என்பதுதான் என்ரான் திட்டம். ரிலையன்ஸ், டாட்டா என்கிற எல்லோரும் இதைத் தான் செய்கிறார்கள்; இனியும் இதையே செய்யப்போகிறார்கள்.

இதைத்தான் பெரிய வளர்ச்சியாக இந்திய அரசு சொல்லுகிறது; மாநில அரசுகள் சொல்லுகின்றன. இதைத்தான் அனைத்திந்திய அரசியல் கட்சிகளான பாரதிய சனதா, காங்கிரஸ் இவை கூறுகின்றன. இதைத்தான் இவர்களுக்குக் கையாள்களாகவும் ஏவலர்களாகவும் இருந்து, கூலி வாங்கி, "சுக போகம்" அனுபவிக்க விரும்புகிற திராவிடக் கட்சிகளும், லோகியா சோசலிஸ்ட்டுக் கொள்கை பேசும் கட்சிகளும், குடி அரசுக் கொள்கை பேசும் அம்பேத்கரியக்கட்சிகளும், சாதிக்கட்சிகளும், மத உரிமைக் கட்சிகளும் கூறுகின்றன.

நல்ல தண்ணீரை விலைக்கு விற்கப்படுகிற வேலையைச் செய்ய பொலிவியா, போர்டோ ரிகோ, அர்ஜெண்டினா ஆகிய நாடுகளில் மேலே சொன்ன வணிக நிறுவனங்கள் - அரசுகளால் அனுமதிக்கப்பட்டன. 1995க்குப் பிறகு, "தண்ணீரை நாங்கள் ஏன் விலைக்கு வாங்க வேண்டும்" என்று கேட்டுக் கொதித்தெழுந்த மக்கள் இவர்களை எதிர்த்துப் போராடி, அந்த நாடுகளிலிருந்து, இவர்களை விரட்டியே விட்டார்கள்.

ஆனால், என்ரான் மின்சாரக்குழுமம், மான்சண்டோ விதைக்குழுமம், ஸ்டெர்லைட் குழுமம் என்கிற எதையாவது எதிர்த்து நம் மக்கள் இங்கே போராடுகிறார்களா? இங்குள்ள அரசியல் கட்சிகள், புரட்சிக் கட்சிகள் நம் மக்களை இதற்கு ஆயத்தப்படுத்தினார்களா? இல்லை.

தண்ணீர், கல்வி, மின்சாரம், வைத்தியம் இவை எல்லாம் விலைக்கு வந்துவிட்டதால், விளையப் போகிற பெருந்தீமையை இன்னும் 5 ஆண்டுகளிலேயே நாம் பார்க்கப்போகிறோம். 100க்கு 75 மக்களுக்கு இவற்றில் எதுவும் இலவசமாகவும் கிடைக்காது; குறைந்த செலவிலும் கிடைக்காது. இந்த உண்மையை ஊராருக்கெல்லாம் சொல்ல வேண்டும். இதைச் சொல்லாத அரசியல்வாதிகளை மக்களிடம் நாம் அம்பலப்படுத்த வேண்டும்.

இதுமட்டுமா? இந்தியாவுக்கான ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கை (Export-Import Policy - Exim) ஒவ்வொரு நடுத்தர - சிறிய - குறு விவசாயியையும், விவசாயக் கூலியையும், வாங்கித் தின்கிற கோடிக்கணக்கான மக்களையும் விரைவில் சாவுருக்கு விரட்டிவிட, கடந்த ஆறே ஆண்டுகளில் இந்திய அரசு வழிவகுத்துவிட்டது.

இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி என்பது என்ன?

1. இந்தியாவில் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் துணி, தானியம் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது;

2. சில சமயங்களில் - அன்னிய நாடுகளுக்குச் சேர வேண்டிய இறக்குமதி நிலுவைத் தொகையை ஈடுகட்ட வேண்டி, இங்கே நமக்குத் தேவைப்பட்டாலும், அதைக் குறைத்துக் கொண்டு சில பொருள்களை ஏற்றுமதி செய்வது;

3. நமக்குத் தேவைப்படும் பண்டங்களை, குறைந்த விலையில் கிடைக்கிற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது;

4. மூலப் பொருள்கள் என்கிற பருத்தி, கனிமம், எண்ணெய் வித்துக்கள் இவற்றையும்; உற்பத்தியான ஆடைகள், சர்க்கரை, தானியம், எண்ணெய் இவற்றையும் ஏற்றுமதி - இறக்குமதி செய்தல்.

இந்த ஏற்றுமதி - இறக்குமதிப் பணியை மேற்கொள்ளாத நாடுகளோ, அரசோ உலகத்தில் இல்லை. ஆனால் - இதனால் மக்களுக்கு அதிக அளவில் நன்மை வரவேண்டும்.

உலக வணிக அமைப்பின் விதிகளை ஏற்றுக் கொண்டு, அதுபற்றி மக்களுக்கும் எதுவும் சொல்லாமல் - நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் விவாதிக்காமல் - இந்தியாவிலுள்ள பொருளாதார அறிஞர்கள் இதுபற்றிக் கூறுவதையும் ஆய்வு செய்யாமல், 10 ஆயிரம் பொருள்களுக்கு மேல் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்கிற கொள்கையை ஏற்று அறிவிப்பதை இந்திய அரசு 1997-இல் தொடங்கி 2001க்குள் செய்து முடித்துவிட்டது.

இதில் மீதம் இருந்த 715 பண்டங்களை இறக்குமதி செய்கிற திட்டம் தான், கடைசியாக, இப்போது அறிவிக்கப்பட்டது.

1. ஏற்கெனவே அரசு அறிவித்த பட்டியலில் உள்ள 9300 பண்டங்களை, யார் வேண்டுமானாலும், எந்த அளவுக்கு வேண்டுமானாலும் இறக்குமதி செய்யலாம்.

2. 2001 ஏப்பிரலில், கடைசியாக அறிவிக்கப்பட்ட பட்டியலில் கண்ட 715 பொருள்களை யார் வேண்டுமானாலும் இறக்குமதி செய்யலாம். ஆனால் இந்த 715 இல், 300 பொருள்களைக்குறித்து, எவ்வளவு என்ற வரையறையே இல்லாமல் எவற்றை இறக்குமதி செய்யலாம் என்பதை ஆராய்ச்சி செய்வதற்கு மட்டும், குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி இறக்குமதி செய்யப்பட இருக்கிற பொருள்கள் என்னென்ன?

படிப்பகம்

www.padippakam.com



பால், வெண்ணெய், நெய், குழந்தைகளுக்கான பாலில் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், வெண்ணெய்ப் பிசின், கொப்பரைத் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பிஸ்தா பருப்பு, வாதாம் பருப்பு, எலுமிச்சை, ஆரஞ்சு, திராட்சை, ஆப்பிள், பெர்ரி பழவகைகள், சப்போட்டா பழம், புளி, காப்பி, தேயிலை, வால் மிளகு, மிளகாய் விதை, கோழிக்கறி பயன்படுத்தப்பட்ட பழைய உந்து ஊர்திகள், புதிய உந்து ஊர்திகள் (கார்கள்), இரு உருளை உந்துகள் (ஸ்கூட்டர்), ஆயத்த ஆடைகள் - இப்படிப்பட்ட 300 பொருள்கள் நாளை முதல் இறக்குமதி ஆகப் போகின்றன.

இந்தப் பட்டியலில் கண்ட பண்டங்களில் எந்த வேளாண்மைப் பண்டம் இங்கே விளைய வில்லை? ஏறக்குறைய எல்லாமே இங்கே விளைகின்றன.

எந்தவிதமான பால் பண்டம் இங்கே உற்பத்தியாகவில்லை? எல்லாப் பால் பண்டங்களும் உற்பத்தியாகின்றன. ஒரு மாடு 50 லிட்டர் ஒரு நாளில் கறப்பதற்கு நம்மால் ஏற்பாடு செய்ய முடியவில்லை என்பது மட்டும் உண்மை. ஆனால் கிராமப்புற - நகரப்புற ஏழைகளும், வேளாண்மைக்கூலிகளும், திக்கற்ற பெண்களும் உற்பத்தி செய்கிற பால் வாங்குவார் இல்லாமல் சீ படுகிறது. பால் உற்பத்தியாளர்களிடம் வாங்கப்பட்ட பாலுக்குக், கொள்ளையடிக்கிற கூட்டுறவுகள், தமிழ்நாட்டில் மட்டும் 100 கோடி ரூபாய், பாக்கிர தர வேண்டும்.

கரும்பை விற்ற தமிழ்நாட்டு வேளாண்மைக்காரர்கள் ஓராண்டாகப் பணம் பெற முடியாமல் தத்தளிக்கிறார்கள்; ஒரு டன் ரூ. 700 - 750க்கு விற்றுவிட்டுக் கடன்காரர்கள் ஆகிறார்கள்.

பொன்னி, வெள்ளைப் பொன்னி நெல்லை மூட்டை ரூ. 350க்கும், 400க்கும் வாங்குவார் இல்லை. ஆனால் அரிசி விலையோ குறையவில்லை. இதில் இடைத்தரகர்கள் கொள்ளையடிக்கிறார்கள்.

ஒரு மூட்டை ரூ. 3000 என்று விற்ற முந்திரிக் கொட்டையை, ரூ. 1500க்குக் கேட்பார் இல்லை.

தமிழ்நாட்டிலும், ஆந்திரத்திலும் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்கள் துணி விற்பனைக்கும், நெசவு செய்து கூலி பெறவும் வக்கும் வழியும் இல்லாமல் சாவை நோக்கித் தள்ளப்படுகிறார்கள்.

இந்தியா முழுவதிலும் தமிழகத்திலும் உள்ள கனிம வளங்கள் இனி எவராலும் ஈன விலைக்கப் பெறப்பட்டு, நிலக்கரி, பெட்ரோல், எரிவாயு இவற்றைத் தோண்டியெடுத்து இங்கேயும் வெளிநாடுகளிலேயும் கொள்ளை விலைக்கு விற்றிட வழி செய்வதற்கு இந்திய அரசும், தமிழ்மாநில அரசும் கங்கணம் கட்டிக் கொண்டு துணிந்து செயல்படுகின்றன.

இவற்றையெல்லாம் மக்களுக்கு உணர்த்துகிற பணியைச் செய்திடப் போதிய வலிமையோ முயற்சியோ இன்றிப் பொதுவுடைமைக்கட்சிகள் தடுமாறுகின்றன; இவற்றைப் பற்றி உண்மையான அக்கறை கொண்ட புரட்சிக் குழுக்கள் இன்னமும் இவர்கள் இந்தியாவில் இருப்பதையே மறந்துவிட்டு, மயிரைப் பிளந்து அதில் தடிம வேறுபாடு பார்க்கிற கொள்கை - வியூகம் - போர்த் தந்திரம் பற்றிக் கதை பேசிக் கொண்டிருக்கிறார்கள்; தேசியம் - பாரதியம் - திராவிடம் - சமூகநீதி பற்றிப் பேசுகிற வாக்குவேட்டைத் திருடர்களும், இவர்களுக்கு முட்டுக் கொடுக்கிறவர்களும் - என்ன செய்தால் வாக்குக் கிடைக்கும் என்பதை மட்டுமே பேசிப்பேசி ஏமாற்றுகிறார்கள்; தொழிற் சங்கவாதிகள் தங்கள் தங்கள் சங்க நலன்கள் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்கள்; மக்களின் வரிப்பணத்தில் ஒரு நல்ல பகுதியை ஊதியமாகப் பெற்று அரசு வேலைபார்க்கிறவர்களும் - அரசினால் படிப்புத் தரப்பெற்றவர்களும், ஏதோ காணாததைக் கண்டுவிட்டது போல் சமூக உணர்வோ, பொறுப்போ இன்றி ஒதுங்கி வாழும் சொகுசுவாசிகளாகவே. ஆகிவிட்டார்கள்.

மக்களுக்கு அறிவு கொளுத்தி, வாழ்வுக்கு இன்றியமையாத - தண்ணீர், கல்வி, வைத்தியம், குடியிருக்க வீடு, வேலை பெற உரிமை என்பவற்றை அடிப்படை உரிமைகளாக - உயிரான உரிமைகளாகப் பெற்றிடப் போராட வைப்பதற்கு மாறாகப் படித்தவர்களையும் படிக்காதவர்களையும் அறிவு முடப்படுத்தி அழிக்கிற கேடான பணிகளை - இங்குள்ள நாள் ஏடுகள், பருவ ஏடுகள், பரபரப்புச் செய்தி ஏடுகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவை திட்டமிட்டுச் செய்கின்றன.

இந்த இழிவான - இக்கட்டான நிலையில் மக்கள் நலம் நாடுவோர் என்ன செய்ய வேண்டும்?

2001 சட்டமன்றத் தேர்தல், 2002-2006க்கும் இடையில் நடக்கப் போகும் மற்ற மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள், 2006-இல் அல்லது அதற்கு இடையிலேயே நடக்கப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் - இவற்றை மக்கள் பேரில் சுமத்தி - தேசியம், இந்துத்துவம், பழமைக் காப்புவாதம், சாதியம் மூலம் மக்களைப் பாழடிக்கப்போகிற கசடர்களை மக்களிடமிருந்து விரட்ட மக்கள் எல்லோரும் முனைய வேண்டும். அதற்கு மக்களை ஆயத்தப்படுத்த வேண்டும். 'மனிதன்' என்றாலே பகுத்தறிவுவாதி தான். இதை உணர்ந்துபோராட மக்களும் ஆயத்தமாக வேண்டும்.

**இன்றேல், கி.பி. 2010-க்குள் கோடிக்கணக்கான நம்மக்களைச் சாவூருக்கு விரட்டி விடுவார்கள் - அரசினர்!**

**எச்சரிக்கை! எச்சரிக்கை!!**

1.5.2001

**வே.ஆனைமுத்து**

படிப்பகம்

www.padippakam.com



துணைத் தலையங்கம்

# 'சிந்தனையாளன்' ஏடு

'சிந்தனையாளன்' ஏடு 17-8-1974 இல் என்னால் தொடங்கப்பட்டது. இன்று 27 ஆம் ஆண்டில் இது நடைபோட வேண்டும். தத்திக் குத்தி வார ஏடு என்பது மாதம் இருமுறை எனவந்து, இன்று மாத ஏடு என்ற நிலையில், 23 ஆவது ஆண்டில் வெளிவருகிறது.

இது திருச்சியிலிருந்து நான் தொடங்கிய மூன்றாவது வார ஏடு ஆகும்.

முதலாவது ஏடு 1950 சூனில் - 'குறள் மலர்' வார ஏடு; இரண்டாவது ஏடு 1957 பிப்பிரவரியில் - 'குறள் முரசு' வார ஏடு. இவற்றால் பெரும் பொருள் இழப்பு, எனக்கு. இந்த மூன்றாவது ஏட்டினால் 1981 வரை ஏற்பட்ட பெரும் பொருள் இழப்பையும் நான் ஏற்றுக் கொண்டேன்.

கடந்த 15 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பெரிய இழப்பு ரூபாய் மூன்று இலக்கம் ஆகும். இதை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி இப்போது சுமந்து கொண்டிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு "சிந்தனையாளன்" "Periyar Era" ஏடுகளை உருவாக்கி வெளியிடுவதற்கு மட்டும் ரூ.20,000 ஆகிறது.

இதை அன்னியில் இடவாடகை, பணியாற்றுவோருக்கு ஆகும் செலவு, தொலைபேசி, அஞ்சல் செலவுகள், சில்லரைச் செலவுகள் என, மாதம் ரூ.15 ஆயிரம் ஆகிறது. இதில் வெட்டியாக ஆகும் செலவும் ரூ.500 அல்லது 1000 அடங்கும்.

'பெரியார் ஊழி' (Periyar Era) ஏட்டுக்கு ஏற்படும் பெருஞ் செலவுத் தொகையில், 6 ஆண்டுகளில் ஒரு நல்ல பகுதியை ச.அ.டேவிட் மட்டுமே ஏற்றுள்ளார். அவர் பெரும் பாராட்டுக்கு உரியவர்.

'சிந்தனையாளன்' தொடர்ந்து வெளிவர அவ்வப்போது முட்டுக் கொடுப்போர் மா.பெ.பொ.க தோழர்களில் சிலரும், வாழ்நாள் உறுப்பினர்களும், வாழ்நாள் உறுப்பினராகப் புதிதாகச் சேருவோரும், இயக்க ஆதரவாளர்களுமே ஆவர். இவ்வளவு ஆதரவும் போதாமல் தான் மூன்று இலக்க ரூபாய் கடனாகி உள்ளது.

ஆண்டுக்கட்டணம் செலுத்த வேண்டிய ஓராயிரம் பேர், ரூ.60 வீதம் 30-4-2001 க்குள் செலுத்தியிருந்தால், ரூ.60,000 கிடைத்திருக்கலாம். இவர்களில் 100 பேர் கூட ரூ.60 வீதமோ, 120 வீதமோ இன்றுவரை அனுப்பாமல் மறந்தும், மறுத்தும் விட்டு விட்டார்கள். இது வருத்தம் தருவது.

இவ்வளவு நெருக்கடிகளையும் தாங்கிக் கொண்டு, 'சிந்தனையாளன்' அகலம், நீளம் என்கிறவற்றில் பெரிய அளவிலும்; கவர்ச்சியான இரண்டு வண்ண மேலட்டையுடனும் 1-5-2001 முதல் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும் என, மா.பெ.பொ.க பொதுக்குழு 11-2-2001 இல் முடிவெடுத்து, 1-3-2001 இல் அறிவித்தது. இதனை முன் வைத்துத் தனி ஒரு படியின் விலை ரூ.7, ஆண்டுக்கட்டணம் ரூ.80 என உயர்த்தி அன்றே அறிவிக்கப்பட்டு விட்டது. வாழ்நாள் கட்டணம் 2000 ஆண்டு முதலே ரூ.1000 ஆகும். இதில் இனி எப்போதும் மாற்றமே இராது.

இனி, 'சிந்தனையாளன்' ஏட்டையும், "Periyar Era' ஏட்டையும் வெற்றியை நோக்கி வளர்தெடுத்திடும் பொறுப்பை மா.பெ.பொ.க தோழர்களும், பெரியாரிய அன்பர்களும், ஆதரவாளர்களும் தாம் ஏற்று நிறைவேற்ற வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

தமிழ் - தமிழர் நலன்; மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர், மார்க்சிய - பெரியாரிய அம்பேத்கரிய சிந்தனைகள் பற்றிப் பலர் உள்ளபடியாகவும், சிலர் பெயரளவிலும் - "சிந்தனையாளன்" தாங்கிவரும் கருத்துத் தெளிவு, கருத்துச் செழுமைமிக்க தன்மையுள்ள செய்திகளைக் கூறிப் பாராட்டுவது உண்மை. தோழமை அமைப்பினரும் இவ் ஏட்டின் இத்தகைய பணியைப் பாராட்டி மகிழ்கின்றனர். இவர்கள் அனைவரும் மனமார்ந்த நன்றிக்கு உரியவர்கள்.

'சிந்தனையாளன்' மாதம் 10,000 படிகள், 2000 வாழ்நாள் உறுப்பினர்கள் எனப் பல்கிப் பெருகி வளர்ந்து, அதன் வெள்ளி விழாவுக்கு முன்னரும், 2001 ஆகஸ்டில் வரும் மா.பெ.பொ.க வெள்ளிவிழா ஆண்டு நிறைவை ஒட்டியும் வெற்றியாக வெளிவர வழி கண்டு உதவுமாறு அனைவரையும் அன்புடனும் கனிவுடனும் மீண்டும் வேண்டுகிறேன்.

1-5-2001

வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்துவக் கொள்கை ஆட்சிக்குத் துணைபோன- துணை போகிற வாக்கு வேட்டைக்காரர்களைப் புறக்கணியுங்கள்!

## மா.பெ.பொ.க. வேண்டுகோள்



தமிழ்நாட்டுச் சட்டப் பேரவைக்கு வரும் மே 10 அன்று தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தேசிய சனநாயக முன்னணி; அ.இ.அ.தி.மு.க. தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மற்றும் ம.தி.மு.க. அணி என மூன்று அணிகள் தனித் தனியாகத் தேர்தலில் போட்டியிடுகின்றன. இக் கூட்டணிகளில் இடம் பெற முடியாத பல்வேறு கட்சிகளும், சாதி அமைப்புகளும், சுயேச்சைகள் பலரும் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலைத் தமிழ்ப்பெரு மக்கள் புறக்கணிக்க வேண்டுமென்று, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றது. ஏன்?

1. தமிழ்நாட்டில் சாதியின் பெயரால் இருந்த சங்கங்களும், இயக்கங்களும் - திராவிடர் இயக்க அரசியல் கட்சிகளில் சேர்ந்து, சாதியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இன உணர்வு, மொழி உணர்வு ஆகியவற்றை ஏற்று வளர்ப்பதற்கு, 1971 வரை உதவின. அதன் பிறகு, சாதிச் சங்கங்களாகத் தோன்றியவை, அரசியல் கட்சிகளாக மாறி உருவெடுத்துத், தனித்து இயங்க முடியாதவர்கள் ஆகி, திராவிட இயக்கக் கட்சிகளோடு, பதவிக்காக என்று மட்டுமே இணைந்து கொண்டன.



இக் கட்சிகளை இரு பெரும் திராவிடக் கட்சிகளும் இப்போது அரவணைத்துக் கொண்டதால் இன, மொழி உணர்வுகள் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு - சாதி உணர்வு முதல் இடத்துக்கு வந்து விட்டது. இது ஆபத்தானது; பேராபத்தானது.

2. கடந்த 5 ஆண்டுக் காலத்தில், முதலில் செயலலிதா தலைமையிலான கூட்டணிதான், தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இந்துத்துவா கொள்கையை நிலை நாட்ட விரும்புகிற பா.ச.க., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளுக்குக் கால் ஊன்ற இடம் ஏற்படுத்தித் தந்தது.

இரண்டாவதாக, மூத்த அரசியல்வாதியான கலைஞர் கருணாநிதி தலைமையில் உருவான அணி, செயலலிதாவின் பழைய கூட்டாளிக் கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு, தமிழ்நாட்டில் பாரதிய சனதா, ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி ஆகியவை குறிப்பிடத்தக்க அளவுக்கு அரசியல் செல்வாக்குப் பெறக் கூடிய மிகப் பெரிய தீய நிலையை உண்டாக்கி விட்டது.

இது திராவிட இயக்கத்தார் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத கேடான தன்மையுள்ள போக்காகும். இப்போக்கு விரைவில் திராவிட இயக்கத்துக்கு ஒரு பெரிய அறைகூவலாக வடிவெடுக்கும் என்பதைத் தமிழின, தமிழ் மொழி உணர்வுள்ளவர்கள் எல்லோரும் உணர்ந்து, இந்த இரண்டு அணிகளையும் மற்றுமுள்ள வாக்கு வேட்டைக்காரர்களையும் இத்தேர்தலில் புறக்கணிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப்போதுள்ள இரண்டு அணிகளும், அவரவர் ஆட்சிக் காலத்தில் செய்து விட்ட - செய்கிற ஊழல்களுக்கும், தவறுகளுக்கும் ஒரு பாதுகாப்புக் கவசமாகவே மத்தியில் ஆட்சியில் உள்ள பாரதிய சனதா ஆட்சியை மாறி மாறி ஆதரித்தன; ஆதரிக்கின்றன. தமிழ் இன, தமிழ் மொழி உணர்வுள்ள தமிழ்ப் பெருமக்கள் இதைப் புரிந்து கொண்டு, தாங்களாகவே இவர்களைப் புறக்கணித்தாலொழிய, இங்கு உண்மையான தமிழ் இன, மொழி உணர்வுள்ள சக்திகள்

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றிணையவோ, இந்த, இரு அணிகளுக்கும் மாற்றாக ஒரு சமதர்ம நோக்குள்ள - தமிழர்க்குத் தன்னுரிமை கோருகிற ஒரு புதிய அணி உருவாகவோ எப்படி வாய்ப்பு வரும்? இதை இப்போதாவது அக்கறையுடன் அனைவரும் உணர்ந்து, வரும் தேர்தலில், இவ்விரு அணிகளையும் புறக்கணிக்க வேண்டுகிறோம்.

3. கடந்த 1991-96 ஆட்சிக் காலத்தில், எஸ்.டி. சோமசுந்தரம் போன்றவர்களின் முயற்சியால், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ள 50% இடஒதுக்கீட்டைக் காப்பாற்றும் ஏற்பாடாக, தமிழ் நாட்டிலுள்ள 69% இடஒதுக்கீட்டைக் காப்பாற்ற வேண்டி, ஒரு தனிச் சட்டம் இயற்றப்பட்டது. அதை எதிர்த்து வழக்கு மன்றத்துக்குச் சென்ற ஒருவரால், எஸ்.டி. சோமசுந்தரம் பெயரில் பொய்யான ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. 1994 முதல் செயலலிதாவும், டாக்டர் ச.இராமதாசும், கலைஞர் கருணாநிதியும் மற்றும் இன்று தேர்தலில் போட்டியிடுகிற எல்லாக் கட்சியினரும், அவர்களை ஆதரிப்பவர்களான தி.க. போன்ற அமைப்பினரும், 69% இடஒதுக்கீடு பாதுகாக்கப்பட உரிய அரசியல் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறினார்கள்.

ஆனால் கடந்த 7 ஆண்டுகளில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினரையும் , அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையினரையும் தவிர, வேறு யாரும் இதற்கு எந்தவித இணக்கமான முயற்சியையும் மேற்கொள்ள வில்லை என்பது உண்மை வரலாறு.

தமிழ்நாட்டில் இப்போது உள்ள பட்டியலின்படி, 80% பேர் பிற்படுத்தப்பட்டவர்கள். இவர்களின் நலனைக் காத்திட, மேற்கண்ட கட்சிகள் கடந்த 7 ஆண்டுகளில் எந்தவித உருப்படியான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இதனைப் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களும், மற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் நன்கு உணர்ந்து கொண்டு, இந்த இரண்டு அணிகளில் எதற்கு வாக்குப் போட்டாலும், அது, தங்கள் தலைமையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதற்கு ஒப்பாகவே ஆகும் என்பதால் இவர்களுக்கு வாக்குப் போடாதீர்கள் என அன்புடன் வேண்டுகிறோம்.

4. இரண்டு அணிகளிலுமுள்ள எல்லாக் கட்சிகளும், மற்ற கட்சிகளும் காவிரி ஆற்று நீர்ச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காகவோ, தமிழ்நாட்டில் தமிழை ஆட்சி மொழி - பயிற்று மொழியாக ஆக்குவதற்காகவோ, இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழியும் ஆக்கப்படுவதற்காகவோ, படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கும் 50 இலட்சம் தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவோ, ஆந்திர அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கிருஷ்ணா ஆற்று நீரை சென்னை மாநகருக்குக் கொண்டுவரவோ உருப்படியான, இணக்கமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

5. ஈழத் தமிழருக்கு விடுதலை வருவதற்கு இணக்கமான தகுந்த ஒரு நடவடிக்கை எடுக்கும்படி, இந்திய அரசுக்கு, எந்தவித அழுத்தத்தையும், தமிழ்நாட்டில் இன்று வாக்குக் கேட்கும் எந்தக் கட்சியும் தரவில்லை. இது இவர்கள் ஈழத் தமிழர்க்குச் செய்த மாபெரும் இரண்டகம் ஆகும். எனவே இவர்களைப் புறக்கணியுங்கள் என வேண்டுகிறோம்.

இந்திய அரசு பின்பற்றி வரும் புதிய பொருளாதாரக் கொள்கையானது வேளாண்மை, சிறு தொழில துறை, நெசவு உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் மக்கள் வாழ்வைச் சொல்லெணாத் துன்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இந்தக் கேடான எதையும் செய்யாமல் இன்றைய நிலையை மாற்றிட அரசுக்குத் துணை போன இவ்விரு அணிகளையும் புறக்கணிக்க வேண்டும் என்றும் தமிழக மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

6. மேலும் இந்தியப் பல்கலைக்கழகங்களில் வேத. சோதிடப் பாடத்தைக் கட்டாயமாக்கவும், பள்ளிக் கல்வியின் எல்லா வகுப்புக்களிலும், சமஸ்கிருத மொழியைக் கட்டாயமாக ஆக்கவும் பலவந்தமாக முயற்சிக்கின்ற பாரதிய சனதாக் கட்சி, தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சி ஆகியவற்றை இந்த அணிகளில் எதுவும் இக்காரணங்களுக்காக எதிர்க்கவில்லை.

எனவே, இந்த இரண்டு அணிகளிலுமுள்ள எந்தக் கட்சிக்கும் மற்ற அணிகளுக்கும் வாக்குப் போட வேண்டாம் என்று மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் வாக்காளப் பெருமக்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

வே.ஆனைமுத்து
செயலாளர்,
மா.பெ.பொ.க.

படிப்பகம்

www.padippakam.com



# பெரியார் சிந்தனையாளர் பேரவை

## மய்ய - மாநில அரசுகளுக்கு வேண்டுகோள்

பெரியார் சிந்தனையாளன் பேரவைக் கூட்டம் 31.3.2001 காலை 10.00 மணிக்கச் சென்னை திருவல்லிக்கேணி சிவ. இளங்கோ இல்லத்தில் நடைபெற்றது. திராவிடர் கழகம், மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, பெரியார் திராவிடர் கழகம், சாதி ஒழிப்பு இயக்கம், பகுத்தறிவாளர் கழகம், தந்தை பெரியார் பகுத்தறிவு மையம், சிந்தனையாளர் மன்றம், நாத்திகர் சங்கம், ஆசிரியர் - அலுவலர் பேரவை மற்றும் பெரியார் தமிழ்ப் பேரவையின் பேராளர்கள் பங்கேற்றார்கள். பேரவை அமைப்பாளர் தஞ்சை இரா. இ ரத்தினகிரி, நாத்திகம் பி.இராமசாமி, வழக்கறிஞர் எஸ். துரைசாமி, வே.ஆனைமுத்து, சங்கமித்ரா, அ.மதிவாணன், தனசேகரன், சீர்காழி மா.முத்துச்சாமி, திருச்சி சி.மருதை, பு துகை இராமகிருட்டிணன், மயிலாடுதுறை நாக.இரகுபதி முதலானோர் உரையாற்றினர். கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இந்தியாவில் தற்போதைய வேலையில்லாத் திண்டாட்டத்தால் தவிக்கும் பல கோடிக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு, மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை 55 என (கேரளத்தில் உள்ளது போல) வரையறுக்க வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது."

2. கல்வித் திட்டத்தில் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை இடம்பெறச் செய்தாலொழிய வரும் தலைமுறையினருக்கு அக் கொள்கைகளை வலுவான அடித்தளத்துடன் எடுத்துச் செல்வது இயலாது என்று இப்பேரவை வலியுறுத்துகிறது. அதற்கு ஆவன செய்யும் வகையில் பெரியாரியலாளர் களையும், கல்வியாளர்களையும் பாடத் திட்ட வல்லு நர்களையும் கொண்ட குழுவை ஏற்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக அரசினைக் கேட்டுக் கொள்கின்றது. மழலையர் வகுப்பு முதல் பல்கலைக் கழக உயர் படி ப்பு வரை பெரியார் கொள்கைகள் தவறாது இடம்பெறும் வகையில் கல்வி த் திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் என இப்பேரை வ கேட்டுக் கொள்கிறது .

3. தகவல் தொழில் நுட்ப ஊழி (I.T. Age) என்று அழைக்கப்படும் தற்போதைய அறிவியல் யுகத்தில் அறிவியல் மனப்பான்மையும், புதிய ஆராய்ச்சிப் போக்குகளும் பெருகி வரும் தன்மைக்கு மாறாக, வேத சோதிடவியலை (மெ) கற்பிப்பதற்கான தனித்துறைகளை எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஏற்படுத்த வேண்டும் என்கின்ற மத்திய அரசு மனித வள மேம்பாட்டுத் துறையின் முடிவுக்கு இப்பேரவை கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது. இதற்கான ஆணையை மத்திய அரசும், (பல்கலைக்கழகங்களுக்கு நிதி அளிக்கும் அமைப்பான) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவும் (UGC) உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று இப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

4. மனித நேயம், பெண்ணுரிமை, சுயமரியாதை, அறிவியல் சிந்தனை, சமுதாய முன்னேற்றம் ஆகியவை சார்ந்த தந்தை பெரியாரின் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்று பரப்பிடவும், மக்களுக்கு அறிவார்ந்த வாழ்வியல் ஈடுபாட்டை வளர்க்கவும் பெரியார் சுயமரியாதை கொள்கைப் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு தமிழ்நாட்டரசைப் பெரியார் சிந்தனையாளர் பேரவை கேட்டுக் கொள்கிறது.

செய்தி: **இரா. இரத்தினகிரி**
அமைப்பாளர்


**அன்பரசி அன்பளிப்பு**

அரியலூர் வட்டம் செந்துறை வட்டம், நமங்குணம் பெரியார் பெருந் தொண்டர் க.ப.அன்பழகன் (தலைவர் மாவட்ட விவசாயிகள் சங்கம்) - செந்தமிழ்ச் செல்வி - இவர்களின் மகள் அன்பரசி இடைநிலை ஆசிரியராக நமங்குணம் தொடக்கப் பள்ளியில் பணி அமர்த்தம் கிடைக்கப் பெற்றதின் மகிழ்வாக, சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com






# ஈழவிடுதலை வந்துசேர ஈழத் தமிழரும் தமிழகத் தமிழரும் என்னென்ன செய்ய வேண்டும்? ஏன்?

சிங்களவர்கள் இலங்கையிலுள்ள சிறுபான்மை மொழி மக்களை அடக்கி அழிப்பதைத் திட்டமிட்டுச் செய்து வருகிறார்கள். முதலில் தமிழ் பேசும் இஸ்லாமியரை அடக்கினர். அடுத்துத் தமிழரை அடக்குவதைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இலங்கைத் தோட்டத் தொழிலாளத் தமிழர்களை, இன்றளவும் கூலி அடிமைகளாகவே வைத்துள்ளனர். அவர்களை நசுக்குவதைக் கண்ட



இந்திய அரசு என்ன செய்தது? பாதிப்பேரை இந்தியாவுக்குத் திருப்பி அழைத்துக் கொள்ள முடிவு செய்தது. அது மூடத்தனமானது. அதைத் தமிழகத் தமிழரோ, ஈழத்தமிழரோ எதிர்த்துக் குரல் தரவில்லை. இலங்கையை வளங்கொழிக்கும் மண்ணாக மாற்றிய தமிழரை - இந்தியரை அங்கேயே எல்லா உரிமைகளையும் கொடுத்துச் சமமான குடிமக்களாக வாழவை என்று, ஈழத் தமிழன் கேட்கவில்லை. இப்படித்தான் செய்ய வேண்டும் என்று இந்தியாவிலிருந்த நேரு, சாஸ்திரி அரசுகளுக்குத் தமிழகத் தமிழன் அழுத்தம் தரவில்லை. சாஸ்திரி - சிறீமாவோ ஒப்பந்தத்தைப் பெரியார் மட்டுமே கண்டனம் செய்தார். தமிழ்த் தோட்டத் தொழிலாளியை அங்கேயே சமஉரிமையோடு வாழவிடு என்றார் அவர். அது பாலைவனக் கூச்சலாகவே போய்விட்டது.

ஈழத் தமிழரிடையே எண்ணற்ற தலைவர்கள் தோன்றினர்.

சிங்கள ஆட்சித் தலைவர்களோடு, பொன்னம்பலம் அருணாசலம் தொடங்கி எல்லாத் தமிழீழத் தலைவர்களும், தமிழரின் தன்னுரிமை காத்திடப் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். எல்லா ஒப்பந்தங்களும் அடுத்த நாளே மீறப்பட்டன அல்லது கிழித்தெறியப்பட்டன. இதுகண்டு வெகுண்டெழுந்து, 'தனிச்சுதந்தரத் தமிழீழமே ஒரே தீர்வு' என்று முழங்கி, சாகும் வரை அதிலேயே பிடிப்போடும் உறுதியோடும் நின்றவர் தந்தை செல்வநாயகம் ஒருவரே.



அவருக்குப்பின், அதே குரலை ஓங்கி ஒலித்த அப்பாத்துரை அமிர்தலிங்கம், இங்கு அறிஞர் அண்ணாத்துரை 1956ல் தவறாக முடிவெடுத்தது போல், 1977ல் அங்கு அவர் முடிவெடுத்தார். இங்கு அண்ணாத்துரை சட்டமன்ற அவைகளில் நுழைய வேண்டி, நாட்டுப்பிரிவினையைக் கைவிட்டது போல, அவரும் அங்கு தனி ஈழக் கோரிக்கையைப் பாராளு மன்றத்தில் ஏற்க வைக்க முடியாமல் தோற்றார். பாராளுமன்ற மயில், நாம் கேட்பதால் இறகு போடாது என்பது, இந்த இருசார் பிரிவினருக்குமே தெரியவில்லையா? அல்லது புரியவில்லையா? தெரிந்தே இருந்தது. ஆனாலும் தெரிந்தே இருவரும் ஏமாற்றினர்.

www.padippakam.com



இதன்பிறகு சிங்களவர் இழைத்த எண்ணற்ற அநீதிகளால், அவற்றை எதிர்த்து எழுந்ததுதான் ஈழவிடுதலைக்கான ஆயுதப் போராட்டம்.

ஆயுதம் ஏந்திய தமிழீழப் போராளிகளைப் பார்த்த பிறகுங்கூட, இங்குள்ள தமிழர்கள் - அறிஞர்கள் - உண்மையில் ஈழவிடுதலையில் அக்கறை கொண்டவர்கள் எல்லோரும், புறநானூற்றுக் காலத்துத் தமிழச்சி முறத்தால் அடித்தே புலியைக் கொன்றுவிட்ட அந்த வீரத்தையும்; - செங்களம் சென்று, பிணங்களைத் துழாவி, சிதைந்து வேறாகிக் கிடந்த மறம் படைத்த தன்மகன் மார்பில் வாள்துளைத்தே மாண்டது கண்டு பூரிப்படைந்த அந்தத் தாயின் வீரத்தையும் பாராட்டிப் பாராட்டி, ஈழ விடுதலை வீரர்களையும் மனமாரப் பாராட்டினர்; ஆதரித்தனர்; அவரவரால் ஆன எல்லா உதவிகளையும் செய்தனர். இதுபோது மானதா? இல்லை.

ஈழத்தைத் தூக்கிப் பிடித்துத் தெருவிலும், மாநாடுகளிலும், சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத் திலும் சிம்ம முழக்கமிட்ட தீரர்கள், இந்திய நாடாளுமன்றத்தில் - கடந்த 17 ஆண்டுகளில் - ஒரு பதினேழு பேரையாவது தமிழர் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களை வயப்படுத்தி, ஈழவிடுதலையைப் பற்றி இந்திய நாடாளுமன்றத்தில் அவர்கள் பரிந்து பேச வழிகாணவில்லையே! ஏன்?

உலக நாடுகளில் - குறிப்பாக, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் - அந்தந்த நாட்டில் உள்ள பாராளு மன்றத்தில், ஈழவிடுதலை ஆதரவுத் தரப்பு - எதிர்ப்புத் தரப்பு என, ஈழம் பற்றிப் பேசிடச் செய்ய, அந்தந்த நாட்டில் உள்ள ஈழத் தமிழரும், தமிழகத் தமிழரும் ஆவன செய்யவில்லையே! இது ஏன்?

தமிழீழ விடுதலை நியாயமானதா? இல்லையா? நியாயமானது; நூற்றுக்கு நூறு சரியானது. இப்படி நாம் - ஈழத் தமிழரும், தமிழகத் தமிழரும் மட்டும் நினைத்தால் - பேசினால் - வாதிட்டால் அது போதாது. இதிலுள்ள நியாயத்துக்காக இலங்கை அரசிடம் வாதாட, பரிந்து பேசிட - போராட அல்ல- இப்படி இரண்டு மூன்று நாடுகளாவது முன்வர ஏற்பாடு செய்ய நாம் எல்லோரும் தவறிவிட்டோம்.

சமயம் நேர்ந்த போதெல்லாம், பாலத்தீன விடுதலையை - பங்களாதேஷ் விடுதலையை இயந்திரத் தன்மையில் - மூடத்தனமாக ஒப்பிட்டுக் காட்டி, 'இவற்றை ஆதரித்தவர்கள், ஈழவிடுதலையை ஏன் ஆதரிக்கவில்லை' என்று ஆதங்கத்தோடு கேட்கி றோம்.

பாலத்தீன விடுதலைப் போராட்டம் 53 ஆண்டுக் கால வரலாறு கொண்டது. உலகம் அறிய அவர்களின் இடங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. பாலத்தீன விடுதலை இயக்கம் முளைத்தபோது தான், அரபு நாடுகள் எண்ணெய் வளநாடுகளாகப் புதிதாக மலர்ந்தன.

1. இந்த அரபு நாடுகள் எல்லாம் - வேண்டும் போதெல்லாம், ஏராளமான நிதியை நன்கொடையாகவும், கடனாகவும் பாலத்தீனப் போராட்டக்காரர்களுக்கு வழங்கின.

2. பாலத்தீனம் தனிச் சுதந்தரநாடு ஆக உரிமை உண்டு என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அய்க்கிய நாடுகள் அவை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

3. போராட்டத்தை நிறுத்திவிட்டும், நிறுத்தாமலும் 1992- 2000 காலகட்டத்தில் அமெரிக்காவைப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வைத்தார், அராஃபத்.

ஆனாலும், எந்த அமெரிக்காவைத் தலையிட வைத்தார்களோ, அதே அமெரிக்கா மறைமுக மாகவும் வெளிப்படையாகவும் இஸ்ரேலையே ஆதரித்து நின்றது. இன்றும் அப்படியே நிற்கிறது. எப்படி?

7.4.2001 அன்று, அய்க்கிய நாடுகள் அவையின் ஒரு பிரிவான மனித உரிமைக் காப்புக்குழு மாநாடு, ஜெனிவாவில் நடைபெற்றது. இக்குழுவில் 53 உறுப்பு நாடுகள் உள்ளன. 53 நாடுகளின் பேராளர்களும் அன்று பங்கேற்றனர். அக்கூட்டத்தில், ''பாலத்தீனிய மக்கள் தன்னாட்சி பெற்றுத் தனிநாடு (State hood) அமைத்துக் கொள்ள உரிமை படைத்தவர்கள். இது மேற்கு ஆசியப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட வேண்டப்படுகிற முக்கியமான கூறு ஆகும்'' என்று பெருவாரியான வாக்குகளை அளித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

இத்தீர்மானத்தை அரபு நாட்டு அரசுகளும், இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பினரும் முன்மொழிந்தனர். 53 நாடுகளில் 48 நாடுகள் பாலத்தீனுக்கு விடுதலை வேண்டும் என்கிற தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்து நிறைவேற்றிவிட்டன.

அய்க்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள மற்ற நாடுகளான பிரிட்டன், சீனா, பிரான்சு, ரஷ்யா இவை ஆதரித்து வாக்களித்தன. எதிர்த்து வாக்களித்த நாடுகள் எவை? முதலாவது அமெரிக்கா, இரண்டாவது குடிமாலா. வாக்களிக்காத நாடு கனடா.

அமெரிக்கா ஏன் வாக்களிக்கவில்லை?

படிப்பகம்

www.padippakam.com



1. இஸ்ரேலைச் சேர்ந்த யூதர்கள் அமெரிக்காவில் பெருஞ்செல்வந்தர்களாக - தொழிலதிபர்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு யூதர்கள் செல்வாக்குப் பெற்றிருக் கிறார்கள்.

2. இஸ்ரேலுக்கு எல்லா வகையான ஆயுதங் களையும் அமெரிக்கா விற்கிறது. அமெரிக்காவுக்கு இஸ்ரேல் ஓர் ஆயுதச் சந்தை.

3. இஸ்ரேலை அரவணைத்துக் கொண்டு, படை பலமும் அறிவு பலமும் இல்லாத அரபு நாடுகளை ஆட்டிப் படைத்து, அங்குள்ள எண்ணெய் வளத்தைச் சுரண்ட வேண்டும். இஸ்ரேல் நீடித்து ஆதிக்கம் செலுத்தினால்தான் அமெரிக்கா இதைச் செய்ய முடியும்.

இவ்வளவுக்குப் பிறகும், பாலத்தீன விடுதலை விரைவில் வராது. அப்படிவர, அமெரிக்கா விடாது. அதாவது பாலத்தீனியரின் உரிமை உணர்வும், ஈகமுமே அவர்களின் குறிக்கோளை வென்றெடுக்கப் போதாது.

இந்த ஆதாயத்தைக் கருதித்தான் இஸ்ரேலியரை அமெரிக்கா அன்றும், இன்றும் ஆதரிக்கிறது. இந்தியாவும் ஒப்புக்கு ஆதரிக்கிறது.

இந்தியா- இப்படிப்பட்ட ஓர் ஆதாயத்தை - ஏகாதி பத்தியத் தன்னலத்தை உள்ளீடாக வைத்துத்தான் - இந்திரா காந்தி, பங்களாதேஷ் விடுதலைக்குத் துணைநின்றார்.

இவற்றை வைத்து, ஆனைக்கு அர்ரம் என்றால் - குதிரைக்குக் குர்ரம் - என்பது போல, 'இந்தியா ஏன் ஈழவிடுதலையை ஆதரிக்கவில்லை?' என்று கேட்போர் -அப்படி இந்திய அரசைக் கேட்க வைத்திட - சிந்திக்க வைத்திட - அத்திசையை நோக்கி அசைய வைத்திடத், தமிழகத் தமிழர் என்ன செய்தோம் என்று சிந்திக்க வேண்டும். இனியேனும் நாம் இதற்கு வழிகாண வேண்டும்.

அச்சம், சினம் அறியாமை காரணமாக ஈழம் பற்றிப் பேச - சிந்திக்க - குரலெழுப்பத் தயங்குகிற தமிழநாட்டுத் தமிழர்க்குப் புதிய உணர்வு ஊட்டி அவர்கள் பல இலக்கக் கணக்கில் தெருவுக்கு வந்து ஈழத்துக்காகப் போராட, இங்குள்ள அனைவரும் இணைந்து வழி அமைக்க வேண்டும்.

தில்லியிலும், இலண்டனிலும் உள்ள தமிழீழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும், அறிஞர்களும், அரசியல்வாதிகளும், அங்கங்கே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள். உயர் அதிகாரிகள், ஏடு நடத்துவோர், இனவழி - மொழிவழித் தேசிய இன விடுதலைக் குழுவினர் இவர்களுக்கு ஈழவிடுதலையின் நியாயம் - தேவை இவற்றைப் பற்றி நன்கு புரியவைத்து, அவர்கள் துணையுடன் இந்திய அரசுக்கும், பிரிட்டானிய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் அழுத்தம் தரவேண்டும்.

இலங்கை அரசு தமிழீழத் தமிழர் மீது நடத்தும் முப்படைத் தாக்குதலை உடனே நிறுத்தம்படியும்; விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேரிலான தடைகளை இந்திய அரசும், இலங்கை அரசும், அமெரிக்க அரசும், பிரிட்டானிய அரசும் நீக்கும் படியும்; விடுதலைப் புலிகளைத் தமிழீழத் தமிழரின் உண்மையான - ஒரே பேராளர் அமைப்பாக அங்கீகரித்து அவர்களோடு இலங்கை அரசு பேச்சு மேற்கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கைகளை . இலங்கை அரசுக்கு வைத்து- இந்திய அரசும், பிரிட்டன் அரசும் நெருக்குதல் தந்திட நாம் வழிகாணவேண்டும்.

இவற்றைப் புறந்தள்ளி விட்டு, இன்று, அவ்வப்போது விடுதலைப் புலிகள் ஈட்டுகிற வெற்றியை விதந்தும், இலங்கை அரசின் பின்னடைவைப் - பலவீனத்தை இகழ்ந்தும் பேசுவது மட்டும் பயன்தராது.

விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான தமிழர்களை அழித்து ஒழித்திட, இப்போது விடுதலைப்புலிகளுக்கு உள்ள ஆண்மையும், ஆள் கட்டும், பற்றுதியும், படைப் பயிற்சியும் போதும். ஆனால் ஒரு குட்டி நாடுதான் இலங்கை என்றாலும் - அது ஓர் அரசு. அது, தொடர்ந்து வலிமையைச் சேர்த்துக் கொண்டு, ஈழத்தமிழரை அடித்து அழித்துக் கொண்டே இருக்கும். இப்படியே எவ்வளவு காலத்துக்கு நடக்கும் என்பதற்கு ஒரே விடை - மிக நீண்ட காலத்துக்கு நடக்கும் என்பது தான். இதனால் ஈழ விடுதலையும் தள்ளிப் போகும் என்பதை நாம் உணர வேண்டும்.

- வே. ஆனைமுத்து

**தொழுதூரில், மாணவர் செல்விருந்தோம்பு விழா**

கடலூர் மாவட்டம், தொழுதூர், அரசு மேனிலைப்பள்ளி ஏழாம் வகுப்பு - ஆ பிரிவு (தி.பி. 2031-32) 'மாணவர் செல்விருந்தோம்பு விழா' 23-03-2001 வெள்ளி மாலை பள்ளி வளாகத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

தலைமையாசிரியர் மற்றும் வகுப்பாசிரியர் மா. அறிவுக்கண்ணு ஆகியோர் பங்கேற்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியர்க்கு மடல்கள்...



மதிப்புயர் அய்யா அவர்கள் அன்புடன் அறிவது. சிந்தனையாளன் ஏப்ரல் 2001 இதழ் இன்று வந்தது. அன்றாடம் அனைத்துத் தினசரிகளையும் படிக்கின்றேன். மய்ய அரசு வரவு செலவு அறிக்கைகளை விரிவாக நான் படித்தேன். ஆனால் இதில் உள்ள சாதக - பாதகங்களைச் சரிவர உணர முடியவில்லை. தங்களின் ஆசிரிய உரை படித்த பின்னர் தான், அறிக்கையின் உண்மைகளை மிகவும் சரியாக அறிய முடிந்தது! மக்களுக்கெதிரான இந்த அறிக்கையை மக்களுக்கு நன்மை செய்யும் திட்டமென்று கூறி இந்த அரசுகள் நம்மை ஏமாற்றுகின்றன! வரி செலுத்தாதோரே மரியாதைக்குரிய பெரிய மனிதர் களாக வலம் வரும் அவலம் இங்கே ரொம்ப நாளாகத் தொடர்ந்து நடந்து வருகிறது, இந்த அருமையான அறிக்கையைப் (தலையங்கத்தை) பலரும் படிக்கக் கொடுத்து வருகின்றேன்!.

மரத்தடி மன்றத்தின் அரசியல் இனி ஒவ்வொரு மாதமும் எதிர்பார்க்கின்றேன். அந்தக் காலக் குத்தூசியாரின் நகைச்சுவை பாணியை இது நினைவு படுத்துகிறது.

கால்காசுக்குச் சோரம் போன கசடர்கள் - அருமை! அரசியல்வாதிகள் அனைவரும் ஊழல் அயோக்கியர்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். நன்றி!

ச.நாத்திக நந்தனார், 3.4.2001

வணக்கம்; ஏப்ரல் திங்கள் 'சிந்தனையாளன்' வந்தார். செவிப்பறையில் அறைந்தார். பல உண்மைகளை. எல்லோரும் கையேந்தி நிற்கும் நாட்டில் நீர் மட்டும் மெய் கூறித்திரிவதன் மர்மமென்ன? தமிழேந்தி என் தம்பி - பஞ்சமனுக்குப் படிப்புவராது; மகுதி இடித்த அத்துவானிக்கு; அண்ணல்மீது ஆணையிட்டே வட்டியுடன் தீர்ப்பதுவே அவர்களது வாடிக்கை! எழுத்தா? எரியீட்டிகள். தலையங்கங்கள் அது எப்போதும் போல் தணல்கிணறு; ஒவ்வொரு வரும் படியுங்கள் என்ற வேண்டுகோள் எதற்கு? ஒவ்வொரு நொடியும் உன் உரை கேட்டு ஊக்கம் பெறுகிறோம் - தமிழேந்தியின் புதுவைப் பாட்டு மன்றம், அருமை.

பா.பா.சு.மணி, திருச்சி-2

## தலையங்கம் அருமை

ஐயா, வணக்கம். 'சிந்தனையாளன்' ஏப்ரல் இதழ் கிடைத்தது. நன்றி. மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பாராட்டு. தங்களது கட்டுரை (தலையங்கம்) 'இடஒதுக்கீடு காவலர்களின் ஏமாற்றுக் கோலம்' மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பாராட்டுகிறேன். அருமையிலும் அருமை. தங்களது அரிய பணி தொடரட்டும்.

அன்பன்,
ஜி.இராமச்சந்திரன்
மண்ணிவாக்கம்

## அருள்கூர்ந்து உதவுங்கள்!



கிறிஸ்டல் சோனா என்பவர் மிகுந்த வறிய நிலையில் உள்ளார். பி.எஸ்சி. நர்சிங் படிக்கிறார். இவருக்குப் பெற்றோர் இல்லை. படிப்புக்காகப் பண உதவி செய்யவும் எவரும் இல்லை. இரண்டாண்டுகளாகக் கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால், இரண்டாவது ஆண்டு தேர்வு எழுத இயலாத நிலையில் இருக்கின்றார். இரண்டாண்டுகளுக்கு இவர் செலுத்த வேண்டிய தொகை ரூ.30,650. படிப்பை முடிக்க சுமார் ரூ.75,000 தேவைப்படும். தோழர்கள் அருள் கூர்ந்து இவருக்கு உதவும்படி வேண்டுகிறோம். ரூ.1000க்கு மேல் செக்/ டி.டி. அனுப்புவோர், "The Principal, Christian College of Nursing, Neyyoor" என்ற பெயரில் எடுக்கவும். செக்/ டி.டி / எம்.ஓ. அனுப்ப வேண்டிய முகவரி:

க.அமலா, 1/129, சுகவரன கோயில் தெரு, மேல்பட்டப்பை, சென்னை-601 301

படிப்பகம்

www.padippakam.com



# ஜனநாயகம்

-ஈ.வெ.இரா

கேள்வி: உலகத்தில், மகா பித்தலாட்டமான சொல் எது?

பதில்: அதுவா, அதுதான் ஜனநாயகம் என்கின்ற சொல்.

கேள்வி: அது என்ன, கடவுள் என்பதை விட மகா பித்தலாட்டமான சொல்லா?

பதில்: அய்யய்யோ, கடவுள் என்பது ஒரு பொதுப் பித்தலாட்டமான சொல்; இந்தப் பித்தலாட்டத்தில் எல்லோருக்கும் பங்கு வரும். ஜனநாயகம் என்கின்ற பித்தலாட்டச் சொல் அப்படி அல்ல; தந்திரக் காரனுக்கு - அயோக்கியனுக்கு - இவர்களைச் சேர்ந்த கோஷ்டிக்குத்தான் பங்கும், பயனும் உண்டு. போக்கற்ற ஆளுக்கெல்லாம், பித்தலாட்ட வாழ்வு கோஷ்டிக்கெல்லாம் பிழைக்கும் வழி - ஜனநாயகம்தான்.

கேள்வி: இதுவே இப்படியானால் - ஜனநாயக முன்னணி, ஜனநாயக அய்க்கிய முன்னணி, ஜனநாயக முற்போக்கு முன்னணி, ஜனநாயக தீவிர முன்னணி, ஜனநாயக அதி தீவிர முன்னணி, ஜனநாயக சுயேச்சை முன்னணி, சுயேச்சை ஜனநாயக முன்னணி, ஜனநாயகக் கூட்டணி என்பது போன்ற சொற்களின் தன்மை என்ன ஆவது?

பதில்: அவைகளா? துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறந்தது போல் - அது மகா பித்தலாட்ட மானால், இவை மகாமகா பித்தலாட்டமாகும்; ஏன் - பித்தலாட்டத்தின் எல்லை யென்றே சொல்லலாம்.

சந்தேகமிருந்தால் இவைகளில் இருக்கின்ற - இவைகளில் சேர்ந்த தனித்தனி ஆட்களை எடுத்துக் கொண்டு, அவர்களது சென்ற கால, நிகழ்கால, எதிர்காலப் பலனைக் கொண்டே 'சாதக'த்தையும், அவர்களது கொடிவழிப்பட்டியையும் பார்.

எங்கேயோ போகிற பனாதி; பிழைப்புக்கு எத்தனையோ வழியில் வகை பார்த்து உதைபட்டு வந்த உதவாக்கரை; மற்றும் சகல விதமான அயோக்கியத்தனங்களுக்கும் புகலிடமாக இருக்கிற பரம அயோக்கியர்கள்; தினம் ஒரு கட்சி புகுகிறவர்கள்; சமயத்திற்கேற்ற கொள்கைகளைப் பேசுகிறவர்கள்; எதைச் சொன்னால் மக்கள் ஏமாறுவார்களோ அதைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறவர்கள்; கலவரம் உண்டாக்குவதாலேயே பிழைக்கக் கூடியவர்கள் - இவர்களும், இவர்களைப் போன்றவர்களையும் பெரிதும் கொண்ட ஸ்தாபனங்கள்தானே! எந்தப் பெயர் இருந்தாலும் - அதற்குச் சொந்தப் பெயர், 'பித்தலாட்ட மோசடி ஸ்தாபனம்' என்றுதானே சொல்ல வேண்டும்?

கேள்வி: சிலர் - இரண்டொரு, அப்படிப்பட்ட வர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்களே?

பதில்: இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளுவோமே! இருந்தால் அவர்களை மோசடிப் பித்தலாட்ட அயோக்கியர் என்று



சொல்ல வேண்டாம்; முட்டாள்கள் என்று சொல்லு!

கேள்வி: இப்படிச் சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ள மாட்டார்களா?

பதில்: யாரும் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். தேவடியாளை, 'விலைமாதர்' என்றால் கோபிப் பார்களா? நியாயவாதியைப் பொய் விற்பனை யாளர்கள் என்றால் கோபிப்பார்களா? வாணிபர்களை ஏமாற்றுக்காரர்கள் என்றால் கோபிப்பார்களா? அதுபோலத் தானே இதுவும். ஆதலால், கோபித்துக் கொள்ளுபவர்கள் யாராய் இருந்தாலும் - அவர்கள் தலைக்கு இந்தக் குல்லாய் சரியாய் இருக்கிறது என்று அவர்களே ஒப்புக் கொள்ளுவதாகத் தான் அர்த்தமாகும்.

கேள்வி: சரி

பதில்: சரி!

கேள்வி: வணக்கம்.

பதில்: வணக்கம்; வணக்கம்!

*(சித்திரபுத்திரன் என்ற பெயரில் எழுதியது 'விடுதலை' 4.10.1932)*

('பெரியார் சிந்தனைகள்', 874-875)

படிப்பகம்

www.padippakam.com



## காவிமயமாக்கப்படும் கல்வித்துறை

# கல்லூரிகளில் 'சோதிட விஞ்ஞானக் கல்வி'

- க. முகிலன்

பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு (UGC) 2001-2002 கல்வி ஆண்டில் 'சோதிட விஞ்ஞானம்' என்ற பெயரில் சான்றுநிலை, பட்டயம், இளங்கலை, முதுகலை, முனைவர் ஆகிய நிலைகளில் கல்லூரிகளில் படிப்பைத் தொடங்க முடிவு செய்துள்ளது.

வேத சோதிடக் கல்வியை அறிமுகப்படுத்துவது குறித்துப் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களின் கருத்தை அறிவதற்காக அனுப்பிய கடிதத்தில், ''இந்தியாவில், வேத சோதிட விஞ்ஞானத்திற்குப் புத்துயிரூட்ட வேண்டிய அவசரத் தேவை இருக்கிறது. இந்த விஞ்ஞான அறிவு நம் சமூகத்தைப் பரவலாகச் சென்றடைய வேண்டும். வெளிநாட்டிற்கும் இதை உணர்த்த வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது. இருபது பல்கலைக்கழகங்கள் வேத சோதிடக் கல்வியைத் தொடங்குவதற்கு முன்வந்துள்ளன.

சோதிடம் ஒரு விஞ்ஞானமா? அறிவியல் அடிப்படையில் அமைந்துள்ளதா? சோதிடம் வேத காலம் முதல் இருந்து வருகிறது; நம்பப்பட்டு வருகிறது. பவுத்தம் தவிர மற்ற எல்லா மதங்களிலும் சோதிடத்திற்கு இடமுண்டு. இதனால் வெளிநாடுகளிலும் சோதிடம் நம்பப்பட்டு வந்தது. ஆனால் 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் அய்ரோப்பாவில் ஏற்பட்ட அறிவு எழுச்சிக் காலத்திற்குப் பின் சோதிடம், பேய், பூதம், பில்லி, சூனியம், மந்தரிகம் போன்றவை அந்நாடுகளில் மதிப்பிழந்து போயின. வான்கோள்களின் மற்றும் கோள்களின் இயக்கம் பற்றிய கண்டுபிடிப்புகள் சோதிட மாயையை விரட்டியடித்தன. இன்றுவரை ஏற்பட்டுள்ள வான் கோள்களின் இயக்கம் பற்றிய ஆராய்ச்சி, சோதிடத்தை ஒரு விஞ்ஞானம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை.

2 + 2 = 4 என்பது போன்றது அறிவியல். எந்த நாட்டில் எந்த மனிதன் இரண்டையும் இரண்டையும் கூட்டினாலும் நான்குதான் வரும்; அது மாறாது; மாற்ற முடியாது. அதுபோல அறிவியல் உண்மை என்பது யார் பரிசோதித்துப் பார்த்தாலும் ஒரே முடிவு அல்லது விடை கிடைப்பதாக இருக்க வேண்டும். சோதிடம் இத்தகைய அறிவியல் அடிப்படையின் மீது உருவானதல்ல! உலகில் எந்தவொரு அறிவியல் அறிஞரும் சோதிடத்தை ஒரு விஞ்ஞானமாக ஏற்கவில்லை. எனவே சோதிடம் ஒரு விஞ்ஞானம் என்பது மோசடியாகும்!

நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர் சர்.சி.வி. இராமன், சோதிடத்தை நம்பினார் என்று இந்துத்துவ வாதிகள் கூறுகின்றனர். அவர் நம்பினார் என்பது உண்மைதான்! ஆனால் சோதிட நம்பிக்கையைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு பாமரராக இருந்தார் என்பதும் அதைவிட உண்மை. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களும் பெரிய விஞ்ஞானிகளாக இருந்திருக்கிறார்களே என்று ஆத்திகவாதிகள் மார்க்சியத்தின் முன் கேள்வி எழுப்பினார்கள். தன் பரிசோதனைக் கூடத்தில் - அறிவியல் ஆய்வில்

### வடமொழி கூடவே கூடாது!

*நமது மேன்மைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றதும், நம் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டக் கூடியதும், நம் இழிவைப் போக்கக் கூடியதுமான எம் மொழியிலிருந்தும் - நம் மொழிக்கு ஆக்கம் தரக் கூடியதும் அவசியமானதும் ஆகிய சொற்களை எடுத்துக் கொள்ளலாம். எம்மொழித் தொடர்பிருந்தாலும் பரவாயில்லை; நமக்கு வடமொழித் தொடர்பு மட்டும் கூடவே கூடாது. தமிழ் ஒன்று தான் இன்று வரைக்கும் வடமொழிக் கலப்பை ஓரளவுக்காவது எதிர்த்து வந்திருக்கிறது; வேற்று மொழிக் கலப்பின்றித் தனித்துச் சிறப்புடன் வாழக் கூடிய தன்மையைத் தமிழ் பெற்றிருக்கிறதென்று மேனாட்டு மொழி வல்லுனர்களே எடுத்துக்காட்டியுள்ளார்கள்.*

ஈ.வெ.இரா

('பெரியார் சிந்தனைகள்', 972-973

படிப்பகம்

www.padippakam.com



ஈடுபட்டிருக்கும்போது கடவுளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆராய்ச்சி செய்கிறார்கள்; பரிசோதனைக் கூடத்திலிருந்து வெளிவந்த பிறகு மீண்டும் அவர்களிடம் கடவுள் நம்பிக்கை தொற்றிக் கொள்கிறது என்று மார்க்சியம் பதில் கூறியது.

மனிதனை இன்றுள்ள நிலையிலேயே கடவுள் படைத்தார் என்று எல்லா மதங்களும் கூறுகின்றன. கிறித்துவமும் இசுலாமும் ஆதாம் - ஏவாள் ஆகிய ஆண் - பெண்ணை கடவுள் முதலில் படைத்தார் என்று கூறுகின்றன. ஆனால் ஆதாம் - ஏவாளைக் கடவுள் முதலில் படைத்தார் என்று பாடநூலில் எங்கேனும் இருக்கிறதா? உலகெங்கும் உள்ள கிறித்துவர்கள் ஆதாம் - ஏவாள் - சாத்தான் கதையை இன்றும் நம்புகிறார்கள். ஆனால் இந்தியாவிலோ வேறு எங்குமோ இது ஒரு பாடமாக ஏன் கற்பிக்கப்படுவதில்லை! சார்லசு டார்வினின் உயிர்களின் தோற்றம் பற்றிய ஆய்வு கடவுளின் படைப்புத் தத்துவத்தையே தகர்த்து விட்டது. உயிர்களின் பரிணாம வளர்ச்சியே மனிதன் என்ற டார்வினின் ஆய்வுக் கோட்பாட்டை அறிவியல் உலகம் இன்று வரை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் டார்வின் கிறித்துவர்; கடவுள் நம்பிக்கை உடையவர். ஆனால் மனிதனைக் கடவுள் படைத்தார் என்ற நம்பிக்கையை அவர் ஒதுக்கி வைத்துவிட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டதால்தான் உயிர்களின் பரிணாம வளர்ச்சியைக் கண்டறிய முடிந்தது. நாத்திகர்களான மார்க்சும் ஏங்கல்சும் 1848இல் கம்யூனிஸ்டு அறிக்கையை வெளியிட்ட சில ஆண்டுகள் கழித்து வெளியிடப்பட்ட டார்வின் கண்டுபிடிப்பு, மார்க்சியத் தத்துவத்திற்கு மாபெரும் உந்துதலாக விளங்கியது.

சோதிடம் என்பது என்ன? பெரியார் சொல்கிறார் ''ஜோசியம் என்பது உலக வழக்கில் அனுபவத்தில் ஒரு மனித ஜீவனுடைய பிறந்த காலத்தை ஆதாரமாய் வைத்து அந்த மனிதனின் வாழ்க்கை, அவனுக்கு ஏற்படும் சம்பவம், அதன் பலன் முதலாகியவைகளை மொத்தமாயும், வருஷ பலனாயும், மாத பலனாயும், தினப் பலனாயும், நிமிஷ பலனாயும் சொல்வதும், அவற்றுள் துன்பம் வரத்தக்கது ஏதாவது வர நேர்ந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து தடுத்துக் கொள்வதும், இஷ்ட சித்திக்கு ஏதாவது விரோத மாயிருந்தால் அதற்கும் ஏதாவது பரிகாரங்களைச் செய்வதன் மூலம் விரோதத்தை நீக்கிச் சித்தியடைய முயற்சிப்பதும் ஆகிய காரியங்களுக்கு உபயோகப் படுத்திக் கொள்வதாகும்.'' (சோதிட ஆராய்ச்சி நூல் பக். 8,9). ஒரு பெரிய சோதிடனைக் கேட்டால் கூட சோதிடத்திற்கு இவ்வளவு தெளிவாக வரையறை சொல்ல முடியாது.

தொடக்க காலத்தில், பூமியை மற்ற கோள்கள் சுற்றுகின்றன என்ற அடிப்படையில் சோதிடம் உருவாக்கப்பட்டிருந்தது. கோப்பர் நிக்கசு, சூரியனைத்தான் பூமி உட்பட எல்லாக் கோள்களும் சுற்றுகின்றன என்று நிரூபித்தார். சோதிடம் இதை ஏற்க மறுக்கிறது. பூமியை மையக் கோளாகக் கொண்டே சோதிடம் இன்றும் கணிக்கப்படுகிறது. இது எப்படி உண்மையானதாக இருக்க முடியும்?

சோதிடம் உருவாக்கப்பட்டபோது பூமி தவிர செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டன. யூரேனஸ் *(1781)*, நெப்டியூன் *(1846)*, புளூட்டோ *(1930)* ஆகிய கோள்கள் சூரியனைச் சுற்றுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. மற்ற கோள்களைப் போலவே இம்மூன்று கோள்களினாலும் மனித வாழ்க்கை நிர்ணயிக்கப்பட வேண்டுமல்லவா? அப்படியாயின் 1930க்கு முன்பு கணிக்கப்பட்ட சோதிடங்கள் அனைத்தும் பொய்யல்லவா! தற்போது இந்த மூன்று கோள்களையும் சில சோதிடர்கள் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். பெரும்பாலான சோதிடர்கள் இவற்றை ஏற்கவில்லை. மேலும் இவை தவிர ஆயிரக்கணக்கான குறுங் கோள்களும் (asteroids); நூற்றுக் கணக்கான துணைக் கோள்களும் (Satellites), வால் நட்சத்திரங்களும் நம் சூரிய மண்டலத்தில் உள்ளன. நம்முடைய பால் வெளி மண்டிலத்தில் கோடிக் கணக்கான விண்மீன்கள் இருக்கின்றன. நம்முடைய பால்வெளி மண்டிலத்தைப் போலவே கோடிக் கணக்கான பால்வெளி மண்டிலங்கள் உள்ளன. ஆனால் இவற்றுள் சில கோள்கள் மட்டுமே மனிதனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பது எவ்வளவு பெரிய ஏமாற்று!

*14.4.2001 அன்று விஷு ஆண்டு (சித்திரை முதல் நாள்)* புத்தாண்டையொட்டி, காஞ்சி சங்கராச்சாரி விடுத்துள்ள செய்தியில், வேத சோதிடம், அதன் ராசிகள் பற்றியே விரிவாகக் கூறியிருக்கிறார். வரும் கல்வி ஆண்டில் 'சோதிட விஞ்ஞானம்', கல்லூரிகளில் கற்பிக்கப்படவிருப்பதற்கு ஒரு முன்னோட்டமாக இது அமைந்துள்ளது. (தினமணி 13.4.2001). ''27 நட்சத்திரங்கள், 12 இராசிகள், எந்த ராசியில் சூரியன் எப்பொழுது பிரவேசிக்கிறதோ அப்பொழுது அந்த மாதம் தொடங்குகிறது. ஒன்பது கிரகங்கள் உள்ளன. இராகு, கேது,

படிப்பகம்

www.padippakam.com



தவிர மற்ற ஏழு கிரகங்களும் ஏழு நாள்களாகச் சொல்லப்படுகின்றன. இந்த கிரகங்கள், நட்சத்திரங்கள் இராசிகள் இவற்றின் சுற்றுக்களினால்தான் இவைகளின் பலன்கள் சொல்லப்படுகின்றன. இவை தவிர இராகு காலம் பகலில் மட்டும் வரும். எமகண்டம், குளிகை பகல் இரவு இரண்டிலும் வரும்.'' ஜயேந்திரரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் சில வரிகள் இவை!

இன்றைய வான்கோள் அறிவியல் உண்மைக்கும் சங்கராச்சாரியின் கூற்றுக்கும் தொடர்பே இல்லை. இராகு காலம், எமகண்டம், போன்ற நேரங்களைக் கெட்ட நேரம் என்று உலகில் வேறு எந்த நாட்டிலேனும் கருதுகிறார்களா?

இராகு, கேது என்ற கோள்கள் சூரிய மண்டலத்தில் இல்லை. இராகு, கேது தேவலோகத்தில் வாழும் பெரிய பாம்புகளாகவே கருதப்பட்டன. சில குறிப்பிட்ட நாட்களில் இராகு சூரியனையும், கேது சந்திரனையும் விழுங்குவதற்கு முயற்சிக்கின்றன என்றும், அதனால்தான் சூரிய கிரகணமும், சந்திர கிரகணமும் ஏற்படுவதாகவும் புராணிகர்கள் கூறி வந்தனர். பிறகு தான் இராகுவையும், கேதுவையும் சோதிடக் கணிப்பில் சேர்த்தனர். விண்வெளியை மனிதர்கள் பலபேர் பல முறை விண்கலத்தில் சுற்றி வந்து விட்டார்கள். விண்கலங்களும் கோடிக் கணக்கான புகைப்படங்களை எடுத்துள்ளன. இராகுவும் கேதுவும் இவற்றில் இல்லை. சோதிடர்களோ இராகுவும் கேதுவும் மனிதர்களின் கண்களுக்குப் புலப்படமாட்டா (dark planets) என்று கூறுகின்றனர். அப்படியானால் வானுலகத் தேவர்களுக்கு மட்டும் இவை புலப்படுமோ? இல்லாத கோள்களை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு கணித்துக் கூறப்படும் சோதிடம் வெறும் பித்தலாட்டமல்லவா! இராகுவை வைத்தே இராகு காலம் கூறப்படுவதும் அதை மக்கள் நம்புவதும் எவ்வளவு கொடுமை! காட்டுமிராண்டிக் காலத்தில் பகல், இரவு, இடி, மழை, மின்னல் போன்ற இயற்கை நிகழ்வுகளுக்குச் சரியான காரணத்தைக் கண்டறிய முடியாமல் போன மனிதனை விட, இன்று சோதிடத்தையும், இராகு காலத்தையும் நம்பும் மனிதன் மூடனல்லவா?

குழந்தை பிறக்கும் போது கோள்கள் எந்தெந்த நிலைகளில் இருந்தனவோ அதைப் பொறுத்தே அக் குழந்தையின் உடல் நலமும், ஆயுளும், எதிர் காலமும் அமையும் என்று சோதிடம் கூறுகிறது! குழந்தை பிறந்த நேரம் எது? ''பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும் போதே ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து 7, 8, 9, 10 மாதங்களில் எப்பொழுதானாலும் பிறக்கும் காலமா? அப்படிப் பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? மருத்துவச்சி கையை விட்டு எடுத்த நேரமா? டாக்டர் வயிற்றை அறுத்து எடுத்த நேரமா? என்று பெரியார் அடுக்கடுக்கான கேள்விகளைத் தொடுக்கிறார் (சோதிட ஆராய்ச்சி நூல்).

சோதிடம், ஜாதகம் பார்ப்பது என்பது இன்றும் பார்ப்பனர்களுக்கும், பணக்காரர்களுக்கும், ஓரளவு வசதி பெற்று விட்ட சூத்திரர்களுக்கும் உரியதாகவே இருக்கிறது. கிராமப் புறங்களில் முதல் வகுப்பில் சேர்க்கப்படும் குழந்தைகளுக்குப் பிறந்த தேதியை அங்குள்ள ஆசிரியர்தான் சூன், சூலை மாதத்திற்குள் அமையுமாறு எழுதுகிறார். இந்தக் கோள்களும் சோதிடமும் தாழ்த்தப்பட்டவர்களை மட்டும் தீண்டத்தகாதவனாகவே இன்றும் வைத்துக் கொண்டிருப்பது ஏன்?

*1990 ஆண்டில் இந்தியனின் சராசரி வயது 10 ஆண்டுகள்; 2001 இல் இது 61 ஆண்டுகள். 70, 80 ஆண்டுகளுக்கு முன் ஒரு பெற்றோர்க்குப் பத்துப் பதினைந்து குழந்தைகள் பிறந்தாலும் அவர்களுள் ஓரிருவர் மட்டுமே 50 வயதை எட்டினர். 5 வயதிற்குள் 75% குழந்தைகள் இறந்துபட்டனர். அப்போது ஆண்டவன் அற்ப ஆயுளை எழுதினான் - இப்போது மட்டும் நீண்ட ஆயுளைக் கொடுத்திருக்கிறானா? குறிப்பாக இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, சுகாதார வசதிகள், உணவுப் பெருக்கம், கொள்ளை நோய்கள் ஒழிப்பு முதலான காரணங் களால் மனிதனின் சராசரி ஆயுள் அதிகரித்துக் கொண்டே*

பெரிய வெண்மணி

புலவர் க.வடமலை பெயரன் தோற்றம்

வ.அன்பழகன் - அஞ்சலி ஆகியோர்க்கு 10-4-2001 திங்கள் காலை 12.00 மணிக்கு அரியலூர் தனியார் மருத்துவமனையில் ஆண் மகவு பிறந்துள்ளது. சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு ரூபாய் 100 வழங்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



வருகிறது. இது ஆண்டவன் அருளால் அல்ல.

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்ற மூட நம்பிக்கையை மக்களிடையே வளர்த்து அதன் மூலம் பல மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சி அதிகாரம் பெற்றுள்ள பாரதிய சனதாவும், இராஷ்டிரிய சுயம் சேவக் வகையறாக்களும் மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகளுக்கு மேலும் உரமூட்டி வளர்க்க முயல்கின்றன. இதற்காகத் தம் ஆட்சி அதிகாரத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்துகின்றன. பள்ளிப் பாடத் திட்டங்களில் இந்துத்துவ நச்சுக் கருத்துகளை அறிவியலுக்கும் வரலாற்று உண்மைகளுக்கும் புறம்பாகப் புகுத்தி வருகின்றன. அதன் தொடர்ச்சிதான் வரும் கல்வி ஆண்டில் 'சோதிட விஞ்ஞானம்' எனும் படிப்பைப் புகுத்துவதாகும்.

1975 ஆம் ஆண்டில எஸ்.சந்திரசேகர் உட்பட நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் 19 பேர் அடங்கிய 186 புகழ் பெற்ற விஞ்ஞானிகள் சோதிடத்தைக் கண்டித்துக் கையெழுத்திட்ட ஒரு கடிதத்தை 'தி ஹியூமனிஸ்ட்' (The Humanist) என்ற ஏட்டிற்கு அனுப்பினார்கள். 'கல்வியும் அறிவு நோக்கும் மிகுந்த இக்காலத்திலும் சமூகத்தில் சோதிட நம்பிக்கைகள் ஊடுருவியிருப்பது வியப்பளிக்கிறது. சோதிடத்தைக் கடுமையாக விமர்சிப்பதற்கு மாறாக சோதிடம், ஜாதகம், இராசி பலன்கள் போன்றவற்றைப் புகழ் பெற்ற நாளேடுகளும் பருவ ஏடுகளும் நூல் வெளியீட்டகங்களும் மக்களிடையே பரப்பி வருவது பெரும் கவலை தருகிறது. இந்த நிலை மக்களிடையே முட்டாள் தனத்தையும் மூட நம்பிக்கையையும் வளர்க்கும். சோதிடத்தின் பொய்மைகளை நேரடியாகவும் தீவிரமாகவும் எதிர்ப்பதில் இனியும் காலம் தாழ்த்தாமல் செயல்பட வேண்டும்'' என்று அக்கடிதத்தில் அவ் அறிவியல் அறிஞர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

வாஸ்து சாத்திரத்தையும் அடுத்த ஆண்டு பாடமாக்கப் போகிறார்கள். அதன் பிறகு கைரேகை, பில்லி சூனியம், மந்திரித்தல் போன்றவற்றைப் பாடமாகக் கொண்டு வருவார்கள். அடுத்த ஆண்டு முதல் மத்திய அரசுப் பள்ளிகளில் (CBSE) 10 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை சமசுகிருதம் கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டு விட்டது.

அண்மையில் தில்லியில் நடைபெற்ற உலக சமஸ்கிருத மாநாட்டில் பள்ளிகளில் எல்லா வகுப்புகளிலும் சமஸ்கிருதம் ஒரு கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட அரசு ஆவன செய்ய வேண்டும் எனக் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. பிரதமர் வாஜ்பேயி தொடங்கி வைத்த இந்த மாநாட்டில் கல்வி அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி, பெரும் பங்கு ஆற்றினார். அடுத்து இவர்கள் ஆட்சிக்கு வர வாய்ப்பு நேருமோ, நேராதோ என்கிற சிந்தனைக்கு ஆட்பட்டு இப்படி ஆரிய மொழியைக் கட்டாயப்பாடமாக ஆக்கிட இவர்கள் துடிதுடிக்கின்றனர்.

இந்திய மொழிகளின் தாய் சமசுகிருதமே என்கிறார் முரளிமனோகர் ஜோஷி.

கல்வித்துறை வேகமாகக் காவிமயமாகி வருகிறது. இனியும் 'திராவிட' அரசியல் கட்சிகளையோ, 'தமிழ்' அரசியல் கட்சிகளையோ நம்பாமல் பெரியார் காட்டிய நெறியில் இந்துமத வேத சாஸ்திர புராண ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டியது பெரியாரிய - அம்பேத்கரிய - மார்க்சிய வாதிகள், தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் ஆகியோரின் நீங்காக் கடமையாகும்.

## இந்தியாவில் மக்கள் நாயகம்: இதுதான் உண்மை?

1. ''வென்றே தீருவோம், திராவிட நாடு!'' என்று புறப்பட்ட அறிஞர் அண்ணாவின் தம்பிகள், 1969 தொடங்கி, கடந்த 32 ஆண்டுகளாக மாறி, மாறி இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், சரண்சிங், இராஜீவ் காந்தி, வி.பி.சிங், சந்திரசேகர், குஜ்ரால், நரசிம்மராவ், தேவகவுடா, வாஜ்பேயி என மாறி மாறி வரும் பிரதமர்களை நத்திக் கிடந்ததற்கும், இன்று வாஜ்பேயியை நக்கிக் கிடப்பதற்கும் ஒரே காரணம் - இங்கே இவர்கள் அடிக்கும் கொள்ளைகளை அவர்கள் கண்டுங் காணாமல் இருக்க வேண்டும் என்கிற ஒன்றே ஒன்றுதான்!

2. பொல்லாத திருடரான - திருட்டு முழி வாஜ்பேயியை 'திராவிட இன நலக் காவலர்களும்', 'லோகியா சோசலிசப் புரட்சியாளர்களும்', 'அம்பேத்கரியக் குடி அரசு வாதிகளும்', 'காந்தியம் காத்திடும் அகிம்சாவாதிகளும்', வீட்டுக்கு அனுப்பிவிட வழிவகுக்காமல், இன்றைய அரசோடு ஒட்டிக் கொண்டிருப்பதற்கு ஒரே காரணம் - வாஜ்பேயியை வீட்டுக்கு அனுப்பினால் ஒவ்வொரு எம்.பி.யும் கெட்டிக்காரத்தனமாக 5 ஆண்டுகளுக்குத் திருடித் தின்று கொழுக்கிற 'மக்கள் தொண்டு!' செய்ய் வாய்ப்பு இல்லாமல் - இவர்கள் வீட்டுக்கு ஓட நேருமே என்பதுதான்.

இந்திய மக்கள் நாயகத்தின் இன்றைய வெற்றி பற்றிய உண்மை இதுதான்!

- பார்வையாளன்

படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின்
ரத்தடி மன்றத்தில்
இந்த மாத அரசியல் **2**

# ல்தகா – சைஆ –வில் வாஜ்பேயி அரசு

–ஓலைப்பட்டி கந்தையா

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)

*(இங்கு விவாதிக்கப்படும் கருத்துகள் - யாரையும் மனதைப் புண்படுத்த அல்ல. அதையும் மீறி மனம் புண்பட்டால் - நன்றி)*



*மருதமுத்து:* வெற்றி - வெற்றி மகத்தான வெற்றி! புதிய நீதிக் கட்சிக்கு தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்பாடு வெற்றி!

*வெங்கடேசய்யர்:* பேசாம, நீர், காருகாத்த வேளாளர் என்கிற உம்ம சாதிப் பேரை இலவு காத்த வேளாளர்ன்னு மாத்திக்கலாம். 234 தொகுதியில் போட்டியிடத் திட்டமிட்டு, அம்பது தொகுதி கேட்போம்னு வாய்ச் சவடால் பேசி 5 தொகுதி - தூ!

*மன்னார்சாமி:* (படார் என்று தரையில் செருப்பை அடித்துக் கைதட்டி விட்டு) ஏஞ்சாமி - ஒரு சீட்டே அதிகம்னு காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணிட்டு போற கட்சிகள் உள்ள இடத்தில, அஞ்சு சீட் பெரிசுதானே!

*வெங்கடேசய்யர்:* போய்யா, புண்ணாக்கு. முதலியார்னா - பத்து சமஸ்தானங்களில் திவானாய் இருந்தவா. வெள்ளைக்கார அரசாங்கத்துலே - து பா ஷி - ன் னா லே முதலியார்வாள்தான். ஏன் நீதிக் கட்சியிலே 1930 களில் - கதிகலக்கினவா கூட முதலியார்கள்தான். அவாளுக்கு இந்த கதியா? அட, ஈஸ்வரா!



*மருதமுத்து:* அய்யரே, ரொம்ப முதலைக் கண்ணீர் வடிக்காதிரும். தமிழ்நாட்டில் முதல் ஸ்தானத்தில் இருந்த நீர் - ராஜகோபாலாச்சாரிகாலத்தோட ஊத்தி முடிட்டீர்; ரெண்டாவது ஸ்தானத்தில் இருந்த நான் - இன்னைக்கும் ரெண்டாவதுதான்கிறதுக்கு நெடுஞ்செழியன் -அன்பழகனே சாட்சி. சில்மிஷம் பண்ணாம செய்திகளைச் சொல்லும்.

*மன்னார்சாமி:* ஒரு தமாஷுக்கு, முதல்லே, அந்த ஒரு சீட் - கட்சிங்களைச் சொல்லுங்க சாமி.

*வெங்கடேசய்யர்:* அட்டவணைச் சாதி ஆளுங்க - கல்லுளி மங்கன் கருணாநிதி கிட்டே 20 சீட் புடுங்கிட்டீங்கல்ல - அந்த கொழுப்புய்யா, உனக்கு. சொல்றேன் - தீரன் ஒரு சீட், குமரி அனந்தன் ஒரு சீட், ஜான் பாண்டியன், முத்தரையர் சங்கம், தமிழர் பூமி, உழவர் உழைப்பாளர் கட்சி, கொங்குநாடு மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், லத்தீஃப் கட்சி - அவ்வளவுதான் நினைப்பு வர்றது.

*மருதமுத்து:* கோயம்புத்தூர் 'முங்காரி'யிலே ஒரு கவிதை படிச்சேன் அய்யரே - நல்லாருக்கும் கேளுங்களேன்:

**'ஒண்ணுக்கும் ரெண்டுக்கும் ஒடுதுகள்**

படிப்பகம்

www.padippakam.com



**கக்கூசுக்குள் அல்ல - கூட்டணிக்குள்!**

மன்னார்சாமி: (செருப்பை தரையில் ஓங்கி அடிக்கிறார். கைதட்டுதல் - அவர் பாணியில்) செருப்புதான் தச்சு வாங்கிக்கிட்டீல்ல. இடத்தை காலி பண்ணேன் தம்பி.

வந்தவர்: என்னங்க பட்டா போட்ட இடம் மாதிரி விரட்டறீங்க. கவிதை சுவாரஸ்யமா இருக்கேன்னு நின்னு கேட்டா!

வெங்கடேசய்யர்: உனக்காக நான் படிச்ச அய்க்கூ கவிதை ஒன்னும் சொல்றேன் கேட்டுட்டுப் போ அம்பி

**தொண்டர் காங்கிரஸ்!**

**ஒரு சீட் மட்டும்- ஒரு சீட் மட்டும்**


**தொண்டருக்கா - தலைவருக்கா?**

மன்னார்சாமி: அய்யோ, அய்யோ! கவிதையை நிறுத்திப்புட்டு செய்தியைச் சொல்லுங்க சாமி. 'வாஜ்பேயி என்னமோ ல்தகா சை ஆ - வில் மாட்டிக்கிட்டாராமே!

மருதமுத்து: கருமம், கருமம் காதல் ஆசை -ங்கறதை சினிமாப் பசங்க ல்தகா சைஆ ன்னு மாத்திப் பேசறான். வாஜ்பேயி மாட்டிகிட்டது தெஹல்கா - டாட் காம்!

மன்னார்சாமி: பண ஆசை - பதவி ஆசை - காதல் ஆசை - மனுசன் மாமூலா மாட்டற சங்கதிதானே. அதைத்தான் என்னாங்கறேன்.

வெங்கடேசய்யர்: மன்னார்சாமி! தினத்தந்தி - தினமலர் மாதிரி - கம்ப்யூட்டர் வெச்சிருக்கறவா மட்டும் படிக்கிற பத்திரிகை 'தெஹல்கா - டாட் - காம்.' இதன் ஆசிரியர், நிருபர் எல்லாம் பிஜேபி தலைவர் பங்காரு லட்சுமணன் - ஜியார்ஜ் பெர்னாண்டஸ் வப்பாட்டிங்கறா - விவரம் தெரியலை - ஜெயா ஜேட்லி இவாளை, தனித்தனியா பாத்து சந்திச்சி - நாங்க லண்டனில் பெரிய ராணுவ தளவாடக் கம்பெனி. கோடிக் கணக்கிலெ ராணுவ தளவாடங்களை இந்திய ராணுவத்துக்கு விற்கனும் - நீங்க ஒரு லட்சம் - நீங்க இரண்டு லட்சம் தரகு முன்பணமா வெச்சுக்குங்க. எங்களுக்கு எல்லாம் சாதகமாக முடிச்சுக்குடுங்க' என்றார்கள். பங்காரு லக்சுமணன் 'லொடுக்குன்னு' வாங்கி பணத்தை உள்ளே போட்டுகிட்டார். ஜெயா ஜேட்லி - இவரு கிட்டே கொடுங்கன்னு வேறு ஒருத்தரைக் காட்டினார். 'நான் பிரதமர் அலுவலக பிரிஜேஷ் மிஸ்ரா விடம் பேசிடுவேன்' என்றார் லட்சுமணன். 'நான் பாதுகாப்பு அமைச்சகத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லாம பாத்துக்கறேன்' என்றார் ஜெயா ஜேட்லி. எல்லாம் நாலு நாள் கழிச்சி உலகம் பூரா - டிவியில் படம் படமா ஓடுது. ரகசிய கேமரா வெச்சி படம் பிடிச்சிருக்கா. இந்தியாவோட மானம் கப்பலேறிடுத்து!



மருதமுத்து: இந்தியாவோட மானம்னு ஏன்யா சொல்றீர்? பிஜேபி மானம் - பார்ப்பான்களின் மானம். பிரதமர் அலுவலகம் பூரா பிராமணக் கும்பல்தானே!

வெங்கடேசய்யர்: பெர்னாண்டசும், ஜெயா ஜேட்லியும் கூட பிராமணாள் தானா உமக்கு?

மருதமுத்து: ஏதோ கொஞ்சம் மிக்ஸர்; பெர்னாண்டஸ் கர்நாடகப் பிராமண கிறிஸ்துவர்னு கேள்வி. கேரளத்து நாயர்கள் நான் நம்பூதிரிக்கு பிறந்தவன்னு மார்தட்டறவா - அந்த வகை செட்டூர் குடும்பம் ஜேட்லி!



மன்னார்சாமி: எப்படியோ எல்லாரும் சேர்ந்து ஒரு சக்கிலி - பங்காரு லட்சுமனை உருட்டி உட்டுட்டீங்க!

வெங்கடேசய்யர்: சக்கிலி மட்டும் லஞ்சம் வாங்கலாமோ?

வந்தவர்: ஏங்க செருப்பை தையுங்க - அல்லது திருப்பிக் குடுங்க. காலுக்கு அடியில் மிதிச்சிக்கிட்டு கதை பேசினா எப்படி?

மன்னார்சாமி (படார் என்று செருப்பைத் தரையில் அடித்து) ஒரு தலித் அவமானப்படறது உங்களுக்கு எல்லாம் கதைதான்யா - எடு பத்து ரூபா. மகா பெரிய லஞ்சம் - பிச்சைக் காசு ஒரு லட்சம்; காங்கிரஸ் நரசிம்மராவு ஒரு லட்சம் கோடி திருடினதா பேசினாங்களே - அப்ப எங்கய்யா போனீங்க?

www.padippakam.com



வந்தவர்: (பத்து ரூபா எறிந்து விட்டு செருப்பை கையில் எடுத்துக் கொண்டு ஓடுகிறார்)

வெங்கடேசய்யர்: கோபப்படாதே மன்னார்சாமி. சோனியா காந்தி தனி உதவியாளர் வில்லியம் ஜியார்ஜ் கூட - சி.பி.அய்.யில் மாட்டிக்கிட்டிருக்கிறார்.

மன்னார்சாமி: அது என்ன கதைங்க?

மருதமுத்து: காங்கிரஸ்காரனைத் தாக்குறது அய்யருக்கு அல்வா சாப்பிடற மாதிரி. கேளுப்பா!



வெங்கடேசய்யர்: உமக்கு ஏன்ய பொத்திண்டு போறது? 1946ல் மஞ்சள் பெட்டிக்கு ஓட்டு போட்ட காங்கிரஸ் விசுவாசம் கார்காத்த கும்பலுக்கு இன்னமும் இருக்கோ? மன்னார்சாமி - இந்த வில்லியம் ஜியார்ஜீங்கற பிள்ளையாண்டான் ஒரு மலையாளி; 1985 - 90ல் ஒரு சுருக்கெளுத்தாளனா ரஜீவண்ட வர்றான். இப்ப பாத்தா ரூ.5 கோடி சொத்து. 1991ல் மட்டும் ரூ.3 கோடி - வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கான். ரஜீவ் செத்தது இவனுக்கும் வசதியா இருந்திருக்கும் போல.

மன்னார்சாமி: அய்யோ, ஒரு ஏழை நாட்டை இப்படிக் கண்டவன் எல்லாம் கொள்ளையடிக்கி றானே, தேவுடா!

மருதமுத்து: கொள்ளையை மட்டும் நினைச்சு தேவன்கிட்டே முறையிடாதே மன்னார்சாமி! நிறைய கூத்தியா சங்கதியும் இருக்கு. இந்திய அரசியலில் வைப்பாட்டிகள்னு ஒரு 1000 பக்கம் புஸ்தகம் எழுதலாம். மனைவி இந்திரா காந்தி டெல்லியில் பிரசவ வேதனையில் கிடந்தப்போ - அவர் கணவர் பெரோஸ் காந்தி லக்னோவில் ஏராளமான பெண்களைத் துரத்திக் கொண்டிருந்தார். பிறகு இந்திராவும் கூட திரேந்திர பிரம்மாச்சாரி, எம்.ஓ. மத்தாய் - போன்றவர்களுடன் காதல் லீலைகளை நடத்தினார் - என்று கேதரின் ஃபிராங்க் என்ற அமெரிக்கப் பெண் எழுத்தாளர் எழுதிய 'இந்திரா காந்தி வரலாறு' நூலில் சொல்லியிருக் கிறார். அந்த நூல் இப்பதான் வெளியாகி இருக்கு.

வெங்கடேசய்யர்: நேரு குடும்பம் - மகா யோக்கியர்கள். அதப்பத்தி பேச வந்துட்டீர். மவுண்ட் பேட்டன் பொண்டாட்டி கிட்டதானே நேரு படுத்திண்டான். எகிப்தின் நாசர் கிட்டே படுக்க உடுறதுக்காக இந்திராவை நேரு அழைச்சிண்டு போவார்னு, ஆர்.கே. கரஞ்சியா எழுதினதா நினைப்பு. ஏன்? இதே எம்.ஓ. மத்தாய் தன் வரலாற்றில் 'நேருவைப் பார்க்க ஒரு இளம் பெண் துறவி வருவார். தனி அறையில் அவர்கள் தியானம் செய்வார்கள். இது ஒரு ஆறு மாசம் நடந்திச்சி. அப்பறம் அந்த அம்மா வரலை. பிறகு நான் பெங்களூர் போன போது அதே பெண் துறவி ஒரு குழந்தையைப் பெத்து அனாதை ஆசிரமத்தில் விட்டு விட்டு தலைமறைவாகி விட்டதாகத் தெரிந்தது. அந்தக் குழந்தை யாரனு தெரிஞ்சா பிரம்மச்சாரியான நானாவது எடுத்து வளர்த்திருப்பேன்' என்கிறாரே!

மருதமுத்து: உம்ம சர்.சி.பி - மட்டும் என்ன யோக்யரா? திருவாங்கூர் மகாராணியை இவர் வெச்சிட்டிருந்தது ஊர் அறிஞ்ச கதை. தினம் ஒரு பொம்பிளை வேணுமாம். 89ம் வயதில் லண்டனில் ஏதோ வைத்தியத்துக்குப் போன இடத்திலெ கூட ஒரு நர்ஸைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சி, னதாப் பேச்சு. எல்லாம் உம்ம மாதிரி ஞானவான் கள் சொல்லக் கேள்வி, எனக்கு என்ன தெரியும்?



மன்னார்சாமி: (படார் படார் என்று செருப்பால் தன் தலையில் அடித்துக் கொண்டு) எப்படியாப்பட்ட தலைவர்கள், எவ்வளவு புண்ணிய பூமி அரசியலை மட்டும் சொல்லுங்க சாமி.

மருதமுத்து: சோர்வடையாதே, மன்னார் சாமி. சக்லியர் ஒரு தேசீய இனம், தமிழ் நாட்டில் மட்டும் 65 லட்சம் பேர் இருக்கிறோம்னு எஸ்.டி. கல்யாணசுந்தரம் தலித் முரசில் எழுதியிருக்கிறார்.

வெங்கடேசய்யர்: அது என்னய்யா தேசிய இனம் எங்களை இல்லாம இன்னொன்னு? இந்து - தினமலர் பத்திரிகையில் பார்க்கலையா 'தேசிய நாளிதழ்'னு அச்சடித்திருக்கிறதை? தேசம் - தேசியம்னா நாங்கதான்.

www.padippakam.com



வந்தவர்: ஆமா - இவங்க தேசிய இனம். மணியரசன் - நெடுமாறன் எல்லாம் தேசத்துரோக இனம் - இந்த செருப்பைப் பாருங்க.

மன்னார்சாமி: இம்மாம் கந்தலா செருப்பைக் கொண்டு வரும் போதே நெனச்சேன் - இது தமிழினம்தான்னு! இதிலே தைக்கிறதுக்கு எங்கே இடம் இருக்கு?



மருதமுத்து: எதாவது ஒட்டு கிட்டு போட்டுக் குடு. 4% தேசீயம் இனம் பிராமணர்கள் எல்லா வேலை - பதவி - சுகங்களிலும். இன்னொரு 4 சதவீதம் தேசிய இனம் சக்கிலியர்கள் செருப்பே கதின்னு! என்ன அதிசயமான ஜனநாயகம் இல்லே! அப்படியும் கூட உங்க துக்ளக் ராமசாமி - தெஹல்கா விஷயம் ஒரு ஊழலே இல்லை- அது ஒரு ராணுவ பேரமே இல்லை - வந்தவர்கள் உண்மையான கம்பெனியே இல்லைன்னு சத்தியம் பண்ணி எழுதிப்புட்டாரு.

வெங்கடேசய்யர்: அது என்ன எங்க துக்ளக் ராமசாமி? நான் வடமா; அவர் கவுண்டின்யாவோ - பிரகச்சரணமோ?

மன்னார்சாமி:; ஆஹஹஹா! எல்லாரும் சாதிச் சங்கம் வெச்சா - நீங்க மட்டும் தானே அய்யரே வருண சங்கம் வெச்சிருக்கீங்க? அனைத்து சூத்திரர் சங்கமுன்னு ஒன்னு தப்பித் தவறி வந்துருச்சின்னு வையுங்க - உங்க கதி என்ன ஆகும்?

வெங்கடேசய்யர்: ஒன்னுமே ஆகாது. இப்பவே பிராமண சங்கம் அதிமுக அணியை ஆதரிக்குது. இந்து முன்னணி திமுக அணியை ஆதரிக்குது. இரண்டிலும் இருக்கிறது நாங்கள் இரண்டே முக்கால் பேர் வழிகள்தானே! மோகினி அவதாரம் எடுத்து அய்யப்பனைப் பிரசவிக்கும் ரசவாத வித்தை எங்களுக்கு மட்டும்தான்யா தெரியும். (கைகட்டை விரலை உயர்த்தி ஆட்டுகிறார்)

மருதமுத்து: மெச்சிக்கனும் அந்த மானங் கெட்ட பொழப்பை. அதான் பங்காரு லட்சுமணைத் தள்ளிப்புட்டு, ஜனா கிருஷ்ணமூர்த்தியைக் கொண்டாந்தீங்களோ! ஜனா கிருஷ்ண மூர்த்தியின் தொண்டுன்னு இந்து பத்திரிகை தேடித் தேடிப் பார்த்து, கடைசியில் அவர் 'ஆர்எஸ்எஸ்' பாரம்பரியம்னு சுருக்கமா முடிக்குது. மத்த மத்த இடங்களில் பிஜேபிகாரர்கள் சொந்த பலத்தில் ஜெயிக்க முடியுது. ஜனா கிருஷ்ணமூர்த்தி சொந்த பலத்தில் தோற்கத்தானே முடிந்தது? மூன்று தலைமுறையாக சாதி வெறி - என்கிறது பெரிய தொண்டா?

மன்னார்சாமி: (படார்ன்னு செருப்பை அடித்து) இது நல்ல கேள்விதான்.

வெங்கடேசய்யர்: அய்யா, இலவு காத்த வேளாளரே, பிராமணர்கள் சாதி வெறியை விட்டுடாமலே புதிய ஆதரவாளர்களைக் கண்டுபிடித்து வெற்றி பெறுவதுதான் அவர்களின் சாமர்த்தியமான வரலாறு. திமுக - அதிமுக நிரந்தரப் பகை; திமுக - மதிமுக உறவு புட்டுண்டுடுத்து. ஆனால் பிஜேபி மட்டும் யாருடனும் எப்பவும் உறவு கொள்ள முடிகிறதோன்னோ?

மருதமுத்து: ஏன் இப்படி - திமுக - மதிமுக எலியும் பூனையுமா ஆயிட்டாங்க? முரசொலி மாறன் கூட மதிமுக சார்பாமே!

வெங்கடேசய்யர்: கிரீடம் யாருக்குங்கற பிரச்சினைதான். பிஜேபி ஆதரவுடன் தமிழக ஆட்சியைப் பிடிப்பதுதான் வைகோவின் நீண்டகாலத் திட்டம். பிஜேபிகாரர்கள் நாங்கள் மதிமுகவை ஆதரிக்க மாட்டோம் என்கிறார்கள். அவர்கள் வேண்டாம் என்றாலும் நாங்கள் பிஜேபியை ஆதரிப்போம் என்கிறார் வைகோ. இதில் மட்டும் வைகோவுக்கு சுயமரியாதை பிரச்சினை இல்லையா?

மன்னார்சாமி: அப்போ திமுக ரொம்ப ஸ்டிராங்குன்னு ஆவுமா சாமி?

மருதமுத்து: அது எப்படி ஆகும்? முன்பு மகன் அழகிரி பிரச்சினை; இப்ப மருமகன் முரசொலி மாறன் பிரச்சினை. புதிய கூட்டாளிகளுக்கு அதிக மரியாதை என்று பழைய கூட்டாளிகளின் பொருமல். கால்சீட், அரை சீட்டர்களின் கீழறுப்பு வேலை! சிக்கல்தான்!

மன்னார்சாமி: அப்போ அதிமுக அணிதானே!

வெங்கடேசய்யர்: அங்கேயும் காங்கிரஸ் - தமாகா - வலது இடது கம்யூனிஸ்ட் புலம்பல் இருக்கே. அதுக்கு மேலே தேர்தலில் நிக்கலாமா - கூடாதாங்கிற செல்வியின் சட்டச் சிக்கல். நிக்கக் கூடாதுன்னு ஆயிபோச்சே!

மருதமுத்து: என்னதான் சொல்றீர், அய்யரே!

வெங்கடேசய்யர்: பிஜேபி -யினுடைய 21 பேர் மட்டும் நிச்சயமா ஜெயிச்சுடுவாங்கறேன். வேறு எந்தக் காரணமும் இல்லை. 'சராசரித் தமிழனுக்கு தன் சகோதரத் தமிழனைத் தவிர மத்த எல்லாரையும் பிடிக்கும். இதை சரியா புரிஞ்சுகிட்டு - பிஜேபி - நம்பியார், நாயுடு, கவுடா, கம்மா, ரெட்டி, இவர்களோடு பார்ப்பனர்கள் என்கிற தமிழர் வெறுப்புக் கும்பலைக் களமிறக்கியிருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழினைத் தவிர மற்றவர்கள் ஜெயிப்பதுதான் வரலாறு! ●

படிப்பகம்

www.padippakam.com





# எச்சரிக்கிறேன்!

ஈ.வெ.இரா.

நாட்டில் சாதிப் பிரிவு நாளுக்கு நாள் வளர்ந்து ஒழுக்கக் கேடு, நாணயக் கேடு, நிர்வாகக் கேடு, ஆட்சிக் கேடுகள் ஏற்பட்டுப் பெருகி வருகின்றன. இதற்குக் கடுமையான சட்ட மூலமான பரிகாரம் தேடாதவரை வெளிப்படையான அராஜகமும், உயிர்ச் சேதங்களும் பண்டிகைகளாகவும், உற்சவங்களாகவும் காட்சி அளிக்கப் போவது உறுதி! உறுதி! உறுதியேயாகும்!

ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், நாட்டில் நடைபெறும் நிர்வாக முறையும், காலித் தனங்களும், சாதி ஆதிக்க இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு நடந்து வருவதாலேயும், அனுமதிக்கப் பட்டு வருவதாலேயுமாகும். இதன் வளர்ச்சி, ஆயுதப் பிரயோக வெறியாட்டமாகத்தான் முடிய வேண்டிய தாகும். இதற்கு என்ன ஆதாரம், எடுத்துக்காட்டு என்று சிலர் கேட்கக் கூடும்.

அப்படிக் கேட்பவர்கட்கு இன்று இந்தியா பல தலைமை நாடுகளில் நடந்த, நடைபெற்று வருகிற கொலை, கொள்ளை, நாசவேலைகள் முதலியவைகளே போதிய சான்றாகும். இவையெல்லாம் சாதி உணர்ச்சிக்கு, சாதி ஆதிக்க உணர்ச்சிக்கு 'மைக்ராஸ்கோப்' வைத்துப் பார்க்க வேண்டிய அளவுக்குச் சிறிய எண்ணிக்கையுடைய சாதியார் - உள் ஆளாய் இருந்து உசுப்படுத்தி வருவது என்பது அல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?

'இக் காலித்தன நாச வேலைகளுக்குக் காரணம் பார்ப்பனத் தலைவர், (பார்ப்பனப்) பத்திரிகைகள், பணக்காரர்கள்' என்று ஆட்சியாளாகளால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சொல்லப்பட்டும், காலித்தன நாசவேலைகளால் பல உயிர்களும், பல பத்து இலட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமான சொத்துக்கள், கட்டடங்கள், காரியாலங்கள், வண்டி வாகனங்கள் கொளுத்தப்பட்டும், நாசமாக்கப்பட்டும் கொள்ளை அடிக்கப்பட்டும் இன்று வரை ஒரு பார்ப்பான், ஒரு பணக்காரன், ஒரு பத்திரிகைக்காரன் மீது கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், இத் தொழில்கள் நாடுமுற்றும் பரவுவதற்கும், இதற்கு அடுத்த படிக்கு (ஸ்டேஜுக்கு)ச் செல்வதற்கும் என்ன தடை இருக்க முடியும்?

இதுவரை நாசவேலைக்காரர்களால் நடைபெற்ற காரியங்களைப் பார்த்தால், இனி நடைபெற வேண்டியது மந்திரிகளைக் கொல்ல வேண்டியதும், அய்க்கோர்ட் ஜட்ஜுகளைக் கொல்ல வேண்டியதும் போன்ற காரியங்கள்தானே பாக்கி என்று சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. மற்றும், அதற்கு அடுத்தபடியான வேலையாகச் சாதிக்குச் சாதி கொன்று குவிக்கும் வேலையில்தானே இது முடிவுபெற வேண்டியதாய்த் தீரும் என்று தோன்றுகிறது.

இந்த நிலை ஏற்பட்ட பிறகு இனி என்ன ஜனநாயகம், வெங்காய நாயகம் பேச இந்த நாட்டிகு யோக்கியதை இருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறது. மற்றும் பல ஸ்தாபனங்களில், சட்டசபைகளில், பாராளுமன்ற (பார்லிமெண்ட்) சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் என்பவர்கள் நடந்து கொள்ளும் தன்மைகளைப் பார்த்தால் ஜனநாயகத்தின் யோக்கியதை விளங்கவில்லையா? ஓட்டர்கள், தெரிந்தெடுக்கப்பட்டவர் யோக்கியதை என்ன என்பதும் விளங்கவில்லையா?

பொதுவாக இந்திய ஜனநாயக ஆட்சியை எடுத்துக் கொண்டால் கொள்கைகளால், திட்டங்களால், விளைந்த, விளைந்து தீர வேண்டியவைகளான சில நன்மைகள், வளர்ச்சிகள் என்பவைகள் தவிர, மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட நீதி என்ன? நாணயம் என்ன? யோக்கியம் என்ன? பாதுகாப்பு என்ன? அமைதி என்ன? கையில் வலுத்தவன் காரியம் என்பதல்லாமல் பாமர மக்களுக்குப் பாதுகாப்பு, உரிமை என்ன ஏற்பட்டது என்று சொல்ல முடியும்?

இவ்வளவுக்கும் - அதாவது இந்த சாதிப் பிரிவினால் ஏற்பட்ட கேட்டிற்குக் காரணம், சின்ன (எண்ணிக்கையுடைய) சாதியார்கள் பெரிய (எண்ணிக்கையுடைய) சாதியார்களை யோக்கிய மான முறை அல்லாமல் தந்திரத்தால், சூழ்ச்சியால், கூடா நட்பால் ஆதிக்கம் பெற்று, என்றென்றும் தலையெடுக்க விடாமல் அடக்கி ஆள நினைத்து, ஆண்டு வருவதால்தானே ஒழிய வேறில்லை. இதற்குப்

www.padippakam.com



பரிகாரம் தேடியே ஆக வேண்டும். தேடாவிட்டால் பெரிய (எண்ணிக்கையுடைய) சாதி மக்கள், சின்ன (எண்ணிக்கையுடைய) சாதி மக்களை அழித்து ஒழித்துக் கட்டும் நாள் நெருங்கி விடும் என்றே எச்சரிக்கை செய்கிறேன்.

பெரிய அதிகாரிகளும் இப்படித்தான், ஆசிரியர்கள் 100க்கு 90 பேர்கள் இப்படித்தான். இவர்களுக்கு எல்லாம் சம்பளமாக - படியாக எவ்வளவு பணம் சேர்த்துக் கொடுத்தாலும் சர்க்காரிடம் விசுவாசம் என்பது அறவே ஏற்படுவதில்லை.

இதில் மந்திரிகள் செய்யும் தொல்லை ஒருபுறம்; அவர்களுக்கு வேண்டியவர்களைத் தூக்கி விடுவது, வேண்டாதவனை அழுத்துவது ஆகிய பல தொல்லைகள் விளைகின்றன. ஆகவே, இந்திய ஜனநாயகம் என்பது, இந்த சாதித் தொல்லைகளுக்கு நீதியான, விகிதாசாரமான உரிமைப் பரிகாரம் ஏற்படாதவரை - ஜனநாயகம், காலிகள் நாயகமாகத் தான் காட்சி அளிக்கும் என்பதோடு, மற்றும் முன் குறிப்பிடப்பட்ட கொலை, கொள்ளை முதலிய நாசவேலைகளுக்குப் பயிற்சி செய்யும் கலா சாலையாகத்தான் முடியும் என்று எச்சரிக்கை செய்கிறேன்.

குறிப்பு:

தமிழ்நாடு: பார்ப்பான், சைவன்- பார்ப்பனரல்லாதவர்கள் போராட்டம்.

கேரளா: நாயனார் - ஈழவர் போராட்டம்

ஆந்திரா: பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார், வெலமா - கம்மா போராட்டம்.

கன்னடம்: பார்ப்பான் - லிங்காயத்து, ஒக்கிலிகர் - குரும்பர் போராட்டம்

பம்பாய்: மராட்டி, குஜராத்தி, மார்வாரி, பார்சி முதலிய போராட்டம்

பஞ்சாப்: சீக்கியர் - பஞ்சாபிகள் போராட்டம்

வங்காளம்: பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் போராட்டம்

அஸ்ஸாம்: அஸ்ஸாமி - வங்காளி போராட்டம்

மத்தியப் பிரதேசம்: வங்காளி - பீகாரி போராட்டம்

உத்தரப்பிரதேசம்: காஷ்மீரி பார்ப்பனர் - உத்தரப் பிரதேசப் பார்ப்பனர் - உள்நாட்டுப் பார்ப்பனரல்லாதார் போராட்டம்.

மற்றும் இதுபோலப் பல என்பதோடு, முஸ்லிம் - முஸ்லிம் அல்லாதார்; கிறித்தவர் போராட்டம் மற்றும், பார்ப்பனரால் தூண்டி விடப்படும் சில சாதிகள் தொல்லை - இப்படியாகக் கொள்கைக் காரணமில்லாமல், சாதிக் காரணமாகவே கலவரம், காலித்தனங்கள் உண்டாகின்றன.

இப்போது எல்லாச் சாதிக்கும் படிப்பு ஏற்படுத்தப்பட்டபடியால், இ னி எல்லாச் சாதி, பெரு வகுப்புகள், எல்லா மதங்களுக்கும், பிரிவினை விகிதம் ஏற்படுத்தி விட்டு விடாமல், காலித்தனங்கள் கண்டிப்பாய் அடங்கி விடும்.

('விடுதலை', தலையங்கம் - 7.11.1966)

## சோசலிசம் ஏன்?

*இன்றைய நாட்டு அமைப்பில் - மக்கள் சமுதாய அமைப்பில் இந்தியாவில் சோசலிசம் ஏற்பட்டால் சமுதாயத்துறையில் 100க்கு 3 பேரா யிருக்கும் பார்ப்பனருக்கும், அதுபோலவே 100க்கு 3 பேரிலும் குறைவாயிருக்கும் சில செல்வவான்களுக்கு மல்லாமல் வேறு யாருக்கு என்ன கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டு விடும்? மனித சமுதாயத்திலுள்ள 100க்கு 99 மக்களிடம் உள்ள உயர்வு தாழ்வு உணர்ச்சி, திருட்டு, புரட்டு, மோசடி, கவலை, கள்ளம், ஆத்திரம், பொறாமை, பலாத்காரம், சண்டித்தனம், காலித்தனம் முதலியவை பெரும் அளவிற்குக் குறைந்து விடுமே! தனி நலம் குறைந்து பொதுநலம் வளர்ச்சி யடையுமே! இந்திய ஜனத் தொகையில் பார்ப்பன சாதி 100க்கு 3 பேர்தானே! சைவன் 100க்கு 1/2 கூட இருக்க மாட்டானே! பஞ்சமன் 100க்கு 16 பேர்; பிற்படுத்தப்பட்டவன் 100க்கு 75 பேர்; மற்ற வேஷக்காரசாதி 100க்குச் சுமார் 7 பேர் இருக்கலாம். இவ்வளவு பேரையும் அந்த மூன்று சதவிகிதப் பார்ப்பன ஆதிக்கம் ஆட்டிப் படைப்பதுதானே இன்றைய சுதந்தரம்!*

- ஈ.வெ.இரா

*('விடுதலை' தலையங்கம் - 15.8.1972, 30.4.1973)*

படிப்பகம்

www.padippakam.com





# மானமும் அறிவும் உள்ள தமிழா!

# 'ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழியாத'

# தமிழைப்படி! தமிழையே எங்கும் பாடு!

தமிழகம் ஈன்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை *1945*இல் முதன்முதலாக நான் பார்த்தேன். அப்போது பரமத்தி வேலூர் கந்தசாமிக் கண்டர் பள்ளியில் 11ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அடுத்து, பரங்கிப்பேட்டையில், சிதம்பரம் தையல் கடை கோபாலின் தம்பியின் திருமணத்தில், *1948*இல், அவருடைய சீரிய தலைமையில் பேசினேன். அப்போது அண்ணாமலைப் பல்கலையில் நான் மாணவன். அன்றே அவருடன் அறிமுகமானேன். *1950*இல், நான் இருந்து தொடங்கி நடத்திய 'குறள் மலர்' பற்றிய சில செய்திகளை, *1951* சனவரியில், திருச்சியில் அசோக் பவன் விடுதியில் என்னிடம் கேட்டு அதிர்ச்சி அடைந்து, எனக்கு அறிவுரை சொன்னார். அது முதல் நெருக்கம் ஆனேன். *1954*இல் திருமணம் செய்து கொண்ட நான், என் மாமியார் பிறந்த ஊரான - என் சிறிய மாமியார் வாழ்கிற ஊரான புதுவைக்கு, *1955* சனவரி தொடங்கி அடிக்கடி போனேன். போகும் போதெல்லாம் கவிஞரின் இல்லத்துக்குச் சென்று அவருடன் அளாவளாவினேன்.

*1959* மே கடைசியில் ஒரு நாள். பம்பாயிலிருந்து வெளிவருகிற பவன்ஸ் ஜெர்னல் (BHAVAN'S JOURNAL) என்னும் ஏட்டில், சமஸ்கிருத மொழியை வளர்க்கவும் வளப்படுத்தவும் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி, குலபதி கே.எம்.முன்ஷி எழுதிய கட்டுரையின் சாரத்தை ஒரு சுவடியில் எழுதிக் கொண்டு போய்க் கவிஞரிடம் நேரில் தந்தேன். 'என்ன செய்ய வேண்டும்?' என்றார். 'இதுபற்றி' குயில் ஏட்டில் கட்டுரை வரவேண்டும்' என்றேன். 'கொண்டுபோய்த் தண்டபாணியிடம் கொடு!' என்றார் - 'குயில்' அச்சகத்தில். தண்டபாணி கவிஞரின் இளைய மருமகன். 'அய்யா! இதுபற்றி நீங்கள் எழுத வேண்டும். உங்கள் பேரால் இதுபற்றிக் கட்டுரை வரவேண்டும். நான் எழுதினால் போதிய பயன் இராது' என்றேன்.

'அவர்களைப் பாருங்கள்! இவர்களைப் பாருங்கள்!' என்று தலைப்பிட்டு, அவரே கட்டுரை எழுதி, அது குயில் ஏட்டில் 16.6.1959 இதழில் வெளிவந்தது.

வடமொழியை- வழக்கு அழிந்து ஒழிந்து போன ஆரிய மொழியை வளர்த்திட, அவர்கள் என்னென்ன செய்கிறார்கள் பாருங்கள், மரமண்டைத் தமிழர்களே! என மனங்கொதித்து எழுதினார், புரட்சிக் கவிஞர்.

தமிழன் மனங்கொதிக்கிறான் - நாள்தோறும் மனங்கொதிக்கிறான். எதற்கு? கொதிக்கிற வயிற்றுக்கு எப்படியாவது நல்ல தீனி போட வேண்டும்; எதை விற்றாவது - எதை இழந்தாவது துய்க்க முடியாததைத் துய்க்க வேண்டும் என்று ஏங்கி ஏங்கி, எதை வேண்டுமானாலும் - யாரை வேண்டுமானாலும் போற்றுகிறான்; பாடுகிறான்; வணங்குகிறான்.

அரசு நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும், அன்றாடம்

''ஜனகணமன அதிநாயக ஜெய ஹே!

பாரத பாக்ய விதா தா....

.......................

திராவிட உத்கல வங்கா....' எனப் பச்சிளங் குழந்தைகள், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், அரசியல் தலைவர்கள், பொது மக்கள் என கோடிக்கணக்கான பேர்களை, இல்லாத பாரதம் என்பதை ஓதவைக்கிறான், தமிழன். அன்றும் இன்றும் உள்ள திராவிடம் பற்றியும் பாட வைக்கிறான்.

எதற்காகவும் மானத்தை விற்றிடத்துணிந்த மரத் தமிழன்,

''நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனம் எனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கணமும் அதிற் சிறந்த திராவிடற் றிருநாடும்
தக்க சிறுபிறை நுதலுந் தரித்த நறுந்திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்புமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த
பெருந்தமிழணங்கே
ஆரியம்போல் உலக வழக்குஅழிந்து ஒழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே!''

படிப்பகம்

www.padippakam.com





என, நூற்றாண்டுகளுக்கு முன் மனோன்மணியம் தந்த மாபெருங்கவிஞர் சுந்தரம் பிள்ளை பாடிய பாடலைச் சிதைத்து மூளியாக்கிவிட்டு, இல்லாத பரதகண்டத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு, உண்மையில் உலக வழக்கில் இராத - மக்கள் புழக்கத்தில் வராத, வரமுடியாத வடமொழி ஆரியம் பற்றிப் பாடினால் - ஆரியன் மனங்கொதிக்கும், தமிழன் பிழைக்கும் நாய்ப் பிழைப்புப் போய்விடும் என்று அஞ்சி அஞ்சி, சுந்தரம்பிள்ளையை - அவருடைய அரிய பாடலை நாள்தோறும் சிதைக்கிறான் - மறைக்கிறான். இவன்தான் தமிழன்! இவர்கள் மரத்தமிழர்கள்! இதை அப்படியே 30 ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டு, தொப்பையைத் தடவிக் கொண்டு, சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்ள - பதவி ஏணியில் ஏறி ஏறி மேலே மேலே போகப் படாத பாடுகிறவர்கள்தான் தமிழை அரிந்த - சிதைத்த தமிழ் அறிஞர்கள்.

தமிழா! இன்றைய இந்தியப் பிரதமர்- தமிழை அரிந்த தமிழகத் தலைவர்களால் நல்லவர், வல்லவர், தங்கமனம் படைத்தவர் எனப் போற்றப்படுகிற, தீயமனம் படைத்த வாஜ்பேயி பேசுகிறார், கேளடா, கேள்!

''சமஸ்கிருதம் இந்தியக் கலாசாரத்தின் - பண்பாட்டின் பண்டுவம்; களஞ்சியம். சமஸ்கிருதம் செத்துப் போனவர்களின் மொழி அன்று. இது சாகாவரம் பெற்ற ரிஷிகளின் (immortals) மொழி. தமிழ்மொழி தவிர்த்த மற்றெல்லா மொழிகளுக்கும், சமஸ்கிருதமே தாய். இதில் இல்லாதது எதுவுமே இல்லை. இது மேல்வகுப்பினரின் மொழி என்பது ஒரு பொய். இதை இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கிட டாக்டர் அம்பேத்கர் எவ்வளவோ முயற்சித்தார் - ஆனால் அவரால் முடியாமல் போய்விட்டது. இந்தக் கணினி புத்தாயிரம் ஆண்டுக்கும் மிகவும் பொருத்தமானது சமஸ்கிருதம்; உலக மயச்சந்தை ஓட்டத்தில் ஹல்டி (Haldi) என்கிற 'மஞ்சள்' என்பதைக் குறிக்கிற சொல் சமஸ்கிருதத்தில் இருந்ததனால்தான் பாரம்பரியக் காப்பு உரிமையை (Patent Right) இந்தியா காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. சமஸ்கிருத வல்லுநர்கள் இலக்கணத்துக்கு மட்டுமே முதன்மை தருவதை விட்டுவிட்டு, எல்லோரும் எளிதில் சமஸ்கிருதம் கற்றுக் கொள்ள இனி வழிகாண வேண்டும். இதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் அரசு - பாரத அரசு செய்யக் காத்திருக்கிறது'' என்று உலக சமஸ்கிருத மாநாட்டைத் தொடங்கி வைத்து, 5.4.2001ல், தில்லி மாநகரில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழைப் பற்றி அவர் சொல்லியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை. டாக்டர் அம்பேத்கர் பற்றிக் கூறியிருப்பது ஒரு வரலாற்று உண்மை. 'திராவிட மொழிக் குடும்பத்துக்குத் தமிழே தாய்' என்பது அவர் சொல்ல மறந்த ஓர் உண்மை.

'சமஸ்கிருதம் மேல்வகுப்பினர் மொழி என்று கருதப்படுவது தவறு' என்று அவர் கூறியது பொய்.

'சமஸ்கிருதம் சாகா வரம் பெற்றவர்களின் மொழி; செத்துப் போனவர்களின் மொழி அன்று' என்று அவர் கூறியது பொய்.

'சமஸ்கிருதத்தில் கணினிக் காலத்துக்கு உட்பட, எல்லாக் காலத்துக்கும் வேண்டிய எல்லாம் இருக்கிறது' என்று அவர் கூறியது முழுப்பொய். உலகத்தில் உள்ள எந்த மொழியிலும் எல்லாக் காலத்துக்கும் வேண்டிய எல்லாம் இல்லை; இருக்கவும் முடியாது. இதுவே மெய்.

சமஸ்கிருதம் பார்ப்பனரால் மட்டுமே படிக்கப்பட - கற்கப்பட- ஓதப்பட உரியது. பார்ப்பாணத் தவிர்த்த எவனும் - புலே, அயோத்திதாசர், ஸ்ரீநாராயண குரு, பெரியார், அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் உட்பட எந்த ஒரு பார்ப்பனர் அல்லாதவரும் படிக்கவோ, கேட்கவோ, உச்சரிக்கவோ கூடாத மொழி என்பதால் - அது கடந்த 2000 ஆண்டுக் காலத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஏழு பேரான மக்களுக்கு மறுக்கப்பட்ட மொழி என்பதால் - உண்மையில் உலக வழக்கு அழிந்து, ஒழிந்து, சிதைந்து போன மொழி. இதுவே மெய்.

இந்துத்துவப் பண்பாட்டைச் சடங்குகள் மூலம் நிலைக்க வைப்பதற்குப் பார்ப்பனர்களுக்கு மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கருவியாக - Sanskritisation - பிழைப்புக்குப் பயன்படும் ஒரு மொழியாக - எல்லாப் பார்ப்பனர்களுக்கும் கூடத் தெரியாத ஒரு மொழியாக இருப்பது சமஸ்கிருதம்.

இனி, பாலர் வகுப்பு முதல் பல்கலைப்படிப்பு வரையில் எல்லாவற்றையும் - 100 கோடி மக்களையும், இந்தி வழியில் அல்ல - சமஸ்கிருத வழியில் படிக்கவைக்க வேண்டும் என்பதே இன்றைய புஷ்ய மித்ர சுங்கனாக வந்திருக்கிற பார்ப்பன வாஜ்பேயியின் உள் எண்ணம், பேராசை, குறிக்கோள்.

வேத சோதிடக்கலை, கணக்கு, வேதியியல், இயற்பியல், பொருளியல் எல்லாப் படிப்புகளையும் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் சமஸ்கிருதம் வழியிலேயே கற்பித்திட ஆவன செய்ய வேண்டும் என்பதே பார்ப்பன வாஜ்பேயி என்கிற பார்ப்பனிய ஆட்சித்தலைவரின் உட்கிடக்கை - நெஞ்சில் நிறைந்த எண்ணம். இதை நிறைவேற்றியே தீரவேண்டும் என்பதே இந்தியாவின் கல்வி அமைச்சகத்தைக் கையில் வைத்து ஆட்டுகிற முரளி மனோகர் ஜோஷி என்கிற ஆரிய - இராமாயண வெறிபிடித்த பார்ப்பனத் திருடரின் திட்டம் - தீராத வேட்கை.

இந்திய அரசின் ஒரே ஆட்சி மொழியாக சமஸ்கிருதத்தை ஆக்கியே தீரவேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டு, அதை நாளையேனும் வென்றெடுத்திட, இன்றே திட்டமிட வேண்டும் என்று முடிவெடுத்து, எல்லோருக்கும் எல்லா நிலையிலும் எல்லாக் கல்வியும் சமஸ்கிருத வழியில் தரப்பட எல்லாம் செய்துவிட வேண்டும் என்பதுதான். இந்துத்துவம் காத்திட மட்டுமே ஆட்சியைப் பிடித்து, அதை என்றும் தக்கவைத்துக் கொள்ள எல்லாம் செய்கிற கட்சிதான் பார்ப்பன பாரதிய ஜனதாக் கட்சி!

'சமஸ்கிருதம் எல்லா வகுப்புகளிலும் ஒரு பாடமாக - கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட அரசு ஆவன செய்ய வேண்டும்' என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்படச் செய்து விட்டார், ஜோஷி.

இந்தச் சூழ்நிலையை, அறிவு கொண்டு அடித்து வீழ்த்திடும் ஆற்றலும் ஆண்மையும் படைத்த ஒரு புரட்சிக் கவிஞர், ஒரு நாவலர் பாரதியார், ஒரு மொழி ஞாயிறு பாவாணர் இன்று நம்மிடையே இல்லை. எதையும் தொப்பை - சட்டைப்பை - பதவி நாற்காலிக்காக விற்கத் துணிந்த, சுந்தரம்பிள்ளையை உருச்சிதைத்ததைக் கண்டும் காணாமல் போன-தமிழை அரிந்து வயிறு வளர்க்கிற - தமிழறிஞர்கள் கட்டுக்கட்டாக நம்மிடையே இருக்கிறார்கள். இது ஓர் உண்மை.



இந்த நிலையில், மானமும் அறிவும் உள்ள தமிழன் என்ன செய்ய வேண்டும்?

இனி, பள்ளி தோறும் - விழாவெங்கிலும் மேடைதோறும், மனோன்மணியம் சுந்தரனார் தந்த பாடலை - அந்த எட்டு வரிகளை, ஓர் எழுத்து விடாமல் அப்படியே பாட வேண்டும். அப்படிப் பாடுவது தவறாகாது. ஏன்?

'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்

வாழிய பாரத மணித்திருநாடு

என்ற பாரதியாரின் பாடலை, எவன் - எங்கே மாற்றிப் பாடுகிறான்? இல்லையே!

இதில் செந்தமிழ் வாழ்த்துப் பெறுகிறது - பாரதம் தான் நாடு என்றும் பாடப்படுகிறது. இதை அப்படியே பாடுகிறோம் - எழுதுகிறோம், எல்லோரும்.

அடுத்து,

'ஆரிய நாட்டினர், ஆண்மையோடியற்றும்

சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கு ஓங்குக!'

எனப்பாடி , ஆரிய நாட்டினராக எல்லோரையும் - எல்லாத் தமிழரையும் காட்டி , 'ஆரிய நாட்டினரின்; முயற்சி ஓங்குக!' என்றே பாடினார், பாரதியார் - எண்பது ஆண்டுகளுக்கு முன்!

எந்த மரத் தமிழன், எங்கே இதைப் பாடுவதற்கேனும், எப்போதேனும் மறுத்தான்?

படிப்பகம்

www.padippakam.com



அப்படி மறுக்கும் மறத் தன்மையும் அறிவுத் தெளிவும் இல்லாத தமிழனுக்குச் சூடும் சொரணையும் பிறந்திட, சுந்தரனாரின் தமிழ் வாழ்த்துப் பாடலை - அப்படியே பாடுங்கள்! எங்கும் முழுமையாகப் பாடுங்கள்! இசையோடு பாடுங்கள்! 'இங்கிதம் பாருங்கள்' என்று, இதில் மட்டும் எவரேனும் கூறினால் - எவர் கூறினாலும் அதை ஏறிட்டும் பார்க்காதீர்கள்! பார்ப்பான் துணிந்து பொய்யைக் கூறுகிறான். நாம் கூற விரும்புவதோ - மெய்! மெய்! மெய்!

அரசு - எல்லா வல்லமையும் கொண்டது. அரசு மட்டுமே எல்லார்க்கும் எல்லாம் தரவல்லது. இன்று தமிழ்நாடு அப்படி ஆகாது; ஆந்திரம் அப்படி ஆகாது என்கிற புரிதலும்; இன்றைய அரசு அமைப்பை உடைக்க எங்கெல்லாம் போய், என்னென்ன வெல்லாம் செய்ய வேண்டும் என்று சொல்லித் தர ஏற்ற அரசியல் அறிவும் நெஞ்சத் துணிவும் கொண்ட ஒரு பெரியார் நம்மிடையே இல்லை.

மானமும் அறிவும் உள்ள தமிழா! இவர்களெல்லாம் இனிவர முடியாது. இதற்காக நாம் கை பிசைந்து வாய் புதைத்து நிற்பது கூடாது. இந்த ஒவ்வொருவரையும் நன்றாகப் படித்த - உணர்ந்த - புரிந்த - செயல்படத் துணிந்த ஓராயிரம் அறிஞர்கள், பல்லாயிரம் தொண்டர்கள் இவர்களின் இடத்தை நிரப்ப உருவாக்கப்பட வேண்டும். வாருங்கள், உருவாக்குவோம்!

-வே.ஆனைமுத்து

---

ஓர் உண்மை ஓவியம்

# 'இராகு கால' வண்டி



குடந்தய் வய்.மு. கும்பலிங்கன்

பெரியார் பெருந்தொண்டர், சிற்பக் கலைஞர் திம்மக்குடி சி.இராசன் 30.3.2001 வெள்ளிக்கிழமை அன்று, தஞ்சை மருத்துவக் கல்லூரி சாலை இராசப்பா நகரில் இருக்கும் 'பிள்ளை அன் சன்ஸ்' மாருதி கார் விற்பனையகத்தில் புதிய கார் ஒன்று வாங்கினார். பக்கத் துணை நண்பர்களாக நானும் திராவிடர் கழக முன்னாள் நகரச் செயலாளர் வீ. கலியபெருமாளும் உடன் சென்றிருந்தோம்.

## நல்ல நேரம்

கடையின் உரிமையாளர் சீனிவாசன் அவர்களைச் சந்தித்து ''இன்று வெள்ளிக்கிழமை. காலை 10.30 மணி முதல் 12 மணி வரை நல்ல நேரம். நடு நேரமாகிய 11.15 மணிக்கு வண்டியை எடுக்கவும், ஓட்டவும் விரும்புகிறேன். ஏற்பாடு செய்து கொடுத்து உதவுங்கள்'' என்று நண்பர் கேட்டுக் கொண்டார்.

செய்தியைக் கேட்டறிந்த உரிமையாளர், ''அது இராகு கால நேரமாயிற்றே'' என்று கருத்தறிவித்தார். ''அதனால்தான் கேட்கிறேன்'' என்று நண்பர் விடையிறுத்தார்.

இந்த முதல் உரையாடல் பேச்சே உரிமை யாளரையும் அந்த நிறுவனத்தாரையும் அதிர்ச்சி யிலும், ஆச்சரியத்திலும், புதுமையிலும் புரட்சியிலும் ஆழ்த்தியது. இது போன்ற நிகழ்வை இந்நிறுவனத்தார் இதற்கு முன் கண்டார்கள் இல்லை என்பதே அதற்குக் காரணம்.

## மாலையும் - பழமும்

அடுத்து, உரிமையாளர் சீனிவாசன் ''வண்டிக்கு அணிவிக்க ஆளுயர பெரிய மாலையும், சக்கரங்களில் வைத்து ஏற்ற 4 எலுமிச்சைப் பழங்களும் இருக்கின்றன'' என்க் கருத்தறிவித்தார்.

உடனே, நண்பர் சி.இராசன், 'இந்த வண்டியைக் கண்டு பிடித்தவனின் படத்தை மாட்டி அதற்கு மாலை போட்டு மரியாதை செய்யுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். மேலும் உரிமையாள நண்பரைப் பார்த்து, ''மாலை போட்டால் வண்டி ஓடுமா? அன்றி பெட்ரோல் போட்டால் வண்டி ஓடுமா?'' என்ற வினாவையும் எழுப்பினார். ''மாலை போட்டால் மட்டுமே வண்டி ஓடும் என்று உறுதி நல்குங்கள்; நானே என் செலவில்

படிப்பகம்

அனைவர் வண்டிக்கும் மாலை வாங்கித் தருகிறேன்'' என்றும் சொன்னார். உரிமையாளரும், பணியாளத் தோழர்களும் இராசனின் அறிவுப்பூர்வமான வாதத்தைக் கேட்டு அதிர்ந்தே போனார்கள். அவர்களால் முறையான, சரியான விடையும் விளக்கமும் அளிக்க இயல வில்லை.

பிறகு எலுமிச்சைப் பழம் பற்றிய பேச்சு எழுந்தது.

## இராசனின் அறிவுரை

உரிமையாளரிடமும், நிறுவனத் தோழர்களிடமும் சி.இராசன் கூறியதாவது: 'எலுமிச்சைப் பழம் நல்ல உணவுப் பொருள். அதை கார் சக்கரத்தில் வைத்து ஓட்டி வீண்படுத்த வேண்டாம். சாறு பிழிந்து குடித்து மகிழ்வோம். அல்லது ஊறுகாய் போட்டு உண்டு மகிழ்வோம். இலட்சக்கணக்கில் எங்களிடம் காருக்கெனத் தொகை பெறும் நீங்கள், உங்கள் செலவில் மாலையும் பழமும் தருகிறீர்கள் என்றால் தலை கூர்ந்து அதற்கான தொகையைக் கையில் கொடுத்து விடுங்கள் அல்லது விலையில் கழித்துக் கொள்ளுங்கள்'' எனக் கூறினார்.

''பழத்தில் வண்டியை ஏற்றினால் பின்னர் விபத்து ஏதும் நிகழாது என்று சொல்லுகிறீர்கள். பழத்தில் வண்டியை ஏற்றிய கையோடு உடன் அடுத்து உங்கள் மீது ஏற்றினால் நீங்கள் விபத்துக்கு உள்ளாக மாட்டீர்களா? அல்லது மற்ற எவரும் விபத்துக்கு உள்ளாக மாட்டார்களா? பழக் காவினால் விபத்து ஏற்படாது என்பது உண்மையானால் சாலைகளை மிகுந்த செலவு செய்து போடவும், புதுப்பிக்கவும் அகலப்படுத்தவும் தேவை இல்லைதானே! போக்குவரத்துக் காவல் துறை செயல்பட வேண்டாம் அல்லவா? அரசுக்கு எவ்வளவு பெரிய தொகை மிச்சமாகும்'' எனக் கூறினார்.

உரிமையாளர் நமது எண்ணமும் கருத்தும் கொண்டவர் இல்லை என்றாலும், இராசனின் அறிவுப்பூர்வ வாத விளக்கங்களை அன்போடும் கனிவோடும் கேட்டு மகிழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் வண்டி எடுத்த அன்று மற்றும் ஏழு பேர் வண்டி எடுத்தார்கள். அவர்கள் அத்தனைப் பேரும் இராகு கால நேரம் இல்லாது - வளாகத்தினுள் உள்ள பிள்ளையார் சிலைக்கு சூடம் காண்பித்து வணங்கி, வண்டிக்கு மாலை போட்டு எலுமிச்சைப் பழத்தின்மேல் சக்கரத்தை ஏற்றியே வண்டியை எடுத்தார்கள்.

வண்டி எடுக்கிற எவரும் தங்கள் குல தெய்வக் கோயிலுக்கும் அல்லது நேரே தங்கள் இல்லத்திற்குமே செல்வார்கள். ஆனால் நாங்கள் வண்டி எடுத்த உடனேயே தஞ்சை விளாரில் பள்ளி நடத்தும் இலண்டன் நண்பர் முருகு. வீரசிங்கம் அவர்களின் வள்ளலார் கல்வி அறக்கட்டளையின் ஆக்ஸ்போர்டு பள்ளிக்கே சென்றோம். அடுத்து என் வீடு மற்றும் கலியபெருமாள் வீடு சென்றோம். இறுதியாகவே தன் இல்லம் சென்றார், இராசன்.

## உரிமையாளர் மகிழ்ச்சி

நாங்கள் வண்டியை எடுத்துக் கிளம்பும் பொழுது சீனிவாசனின் தந்தை நாகப்பிள்ளை என்னும் (பிள்ளை என்னும் அவரின் சாதிப் பெயரிலேயே பிள்ளை அன் சன்ஸ் என்ற கார் விற்பனை நிறுவனம் இயங்கி வருகிறது) நிறுவன உரிமையாளர் எங்களை வாசல் வரை வந்து கை கொடுத்து அனுப்பி வைத்ததோடு மட்டும் அல்லாமல், கையையும் அசைத்துப் புன்னகையோடு எங்களை அனுப்பி வைத்தார்.

வண்டி வாங்குகிற - மற்ற மற்ற சமயச் சடங்குகள் செய்கிற, கெட்ட நேரம் - நல்ல நேரம், இராகு காலம், எமகண்டம் பார்க்கிற பக்த ஆத்திகர்கள், படித்த நண்பர்கள் எங்களின் மேற்காணும் நிகழ்வினைப் படித்து அறிந்து உணர்ந்தேனும் திருந்துவார்களா? அறிவு நிலையோடு பொருந்துவார்களா? தம் அறியாமையை எண்ணி வருந்துவார்களா?

### போடாதே ஓட்டு!

-தி.ர.விசயன்

போடாதே ஓட்டு - கை
டாட்டாவே காட்டு
ஓட்டுப் பொறுக்கும் கட்சியாலே
நாட்டுக்கென்றும்
நன்மையில்லே
வாட்டும் வறுமை மக்களுக்கு
வாழ்வுதர ஆட்சியில்லே

என்னடா முனியப்பா - உன்
கையிலே மையி
ஓட்டுப் போட்ட மையா - இனி
போட வேண்டாம் வயிரி

ஐம்பதாண்டு காலமாக
ஆளுகின்ற கூட்டத்தாலே
நன்மை கிடைக்கலே
பொன்னப்பா - இதை
நெனச்சிப் பாரு
முனியப்பா

### சோளிங்கபுரம் ஆசிரியர் கோ.குப்பன் மறைவு

சோளிங்கபுரத்தில் 1981 முதல் மா.பெ.பொ.க.வின் ஆதரவாளராக விளங்கிய ஆசிரியர் தோழர் கோ.குப்பன் 8.4.2001 அன்று மறைவுற்றார். அன்னாரின் மனைவி ஆசிரியர் விசாலாட்சிக்கும் அவர்களுடைய மக்களுக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

www.padippakam.com



நூல் மதிப்புரை

## பெரியார்: மரபும் - திரிபும்



'பெரியார் சுயமரியாதை சமதர்மம்', 'பெரியார் ஆகஸ்டு 15' உள்ளிட்ட சிறந்த பல ஆய்வு நூல்களைத் தந்துள்ள தோழர் எஸ்.வி. இராஜதுரை குறுகிய கால இடைவெளி யில் எழுதி, வெளிவந்துள்ள நூலே "பெரியார் மரபும் – திரிபும்."

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராதல் என்னும் செய்தியில் திராவிடர் கழகம் இப்போது கொண்டுள்ள கருத்தையொட்டி 18.12.2000 அன்று எஸ்.வி.ஆர். 'தினமணி'யில் ஒரு கட்டுரை எழுதினார். 'வரலாற்றைத் திரிக்கலாமா?' என்னும் தலைப்பிட்டு வெளிவந்த அக்கட்டுரைக்கு மறுப்பாக திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி 20.12.2000 அன்று அதே 'தினமணி'யில் ஒரு மறுப்புக் கட்டுரை எழுதினார்.

எஸ்.வி.ஆர். கட்டுரையில் இடம்பெற்ற செய்திகளில் முதலாவது, 1970 இல் தி.மு.க. அரசு கொண்டு வந்த அர்ச்சகர் சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் கருத்துக் கூறவில்லை என்கிற தி.க.வின் இப்போதைய நிலைப்பாடு தவறானது; இரண்டாவதாக, பெரியார் காலத்திலேயே, திராவிடர் கழகம், பிரிவினை இயக்கம் அல்ல என்று அறிவித்துவிட்டதாக தி.க. இயற்றியுள்ள தீர்மானம் உண்மைக்கு முரணானது என்பதாகும்.

இவ்விரண்டு முதன்மையான செய்திகளையும் வீரமணி தமக்கே உரிய பாணியில் தெளிவாகக் குழப்பியும் திரித்தும் மறுத்துள்ளார். வீரமணியின் கட்டுரையில் உள்ள செய்திகளை வரலாற்றுச் சான்றுகளுடன் மறுத்து எழுதப்பட்டுள்ள விரிவான நூல்தான் பெரியார்: மரபும் - திரிபும்.

வழிவழியாய் இருந்து வரும் பரம்பரை அர்ச்சகர் முறையை ஒழிக்கும் தன்மையில் 'தகுதியுடைய அனைவரும் அர்ச்சகராகலாம்' என்னும் திமுக அரசின் சட்டத்திருத்தம் செல்லும் என்று உச்ச நீதிமன்றம் கூறினாலும், 'கோயில்களில் பின்பற்றப்பட்டு வரும் ஆகம முறைகளை யாரும் மீறக் கூடாது' எனத் தீர்ப்புரைத்ததன் மூலம், சட்டம் கொண்டு வந்ததற்கான மூல நோக்கத்தையே சிதைத்து விட்டது. தந்தை பெரியார் கருத்தும் இதுதான். ஏன், வீரமணியும் கூட இதே கருத்தைத்தான் அப்போது கொண்டிருந்தார். பின்னர் அவரது நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், தந்தை பெரியாரின் தனிநாட்டுக் கோரிக்கையைத் திரித்து வெளிப்படுத்தும் தகிடுதத்தங்கள் ஆகியவற்றை எஸ்.வி.ஆர். இந்நூலில் விளக்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, அதையொட்டி விடுதலையில் அப்போது எழுதப்பட்ட தலையங்கங்கள், மகராசன் குழு அறிக்கையின் சில பகுதிகள் போன்றவை இந்நூலின் பின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

நெருக்கடி மிகுந்த இந்தக் காலக் கட்டத்தில் பெரியாரியத்தை வளர்த்தெடுக்கும் பணியில் யாரையும் விட முன் நின்று செயல்பட வேண்டிய வீரமணி, 'நான் பாப்பாத்திதான்' எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டு வலம்வரும் ஒரு தமிழினப் பகையாளிக்குத் தளபதியாகவும் இராஜகுருவாகவும் தடம் மாறிப் போன வரலாற்று அவலத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தும் நூல் இது.

(வெளியீடு: தமிழ் முழக்கம், 29.டாக்டர் குருசாமி சாலை, சேத்துப்பட்டு, சென்னை-31. விலை ரூ.100)

(குறிப்பு: இந்நூலும், இதுபோன்ற முற்போக்கு நூல்களும் சிந்தனையாளன் அலுவலகத்தில் கிடைக்கும். அஞ்சல் செலவுக்கு புத்தக விலையுடன் ரூ.15 சேர்த்து அனுப்பவும்)

-தமிழேந்தி

## 'இசுலாமின் வரலாற்றுப் பாத்திரம்'

ஆசிரியர்: எம்.என்.ராய்
வெளியீடு: விடியல் பதிப்பகம், கோவை
விலை ரூ.25

ஆப்கானிஸ்தானின் இசுலாமிய ஆட்சியாளர்கள் 1400 ஆண்டுகளுக்கு முந்தைய புத்தர் சிலைகளைத் தகர்த்து எறிகிறார்கள். அதே சமயம், இசுலாமிய ஆட்சி நடக்கும் எகிப்தில் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய கோயில்களும் அவற்றிலுள்ள ஆடு, மாடு, கழுகு, முதலை சாமிச் சிலைகளும் சுற்றுலாத் தலமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன எனும் செய்தியும் பத்திரிகைகளில் வருகிறது. இந்த முரண்பாடுகளுக்கு விளக்கம் எம்.என்.ராய். அவர்களின் நூலில் கிடைக்கிறது.

முகமது நபியின் சீடர்கள் தாம் படையெடுத்த நாடுகளில் வாள் முனையில் குர்-ஆனைத் திணித்த அதேசமயம், பாக்தாதைச் சேர்ந்த கலீபாக்களான அல்மேனன், மோத்தாசென் மற்றும் அவ்ரோசிஸ், அல்கந்தி, அபுபக்கர், அவிசினா, அல்கசன் எனப் பல அறிஞர்கள் மதவெறிச் சிந்தனையாளர்களாக விளங்கியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. பிளாட்டோ, அரிஸ்டாட்டில், தாலமி, ஹிப்போகிராட்டஸ், கெலன் போன்ற பேரறிஞர்களின் படைப்புகள் அரபி மொழிபெயர்ப்பில்தான் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை அறியும் போது வியப்பாக உள்ளது.

எனினும், இந்தியாவில் சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையிட்டுத் தரைமட்டமாக்கியது, காசி - மதுரை இந்துக் கோயில்களை மறைக்கும் வண்ணம் மசூதிகளைக் கட்டியது, ஆட்சியதிகாரத்துக்காக, தந்தை - மகன், அண்ணன் - தம்பிப் படுகொலைகள், பெண்களைக் கறுப்பு அங்கிக்குள் திணித்தது போன்ற அரசியல் சமூகக் கேடுகள் இசுலாத்தின் பெயரால்தான் நடந்தன. இதற்கும் எம்.என்.ராய் விடை தருகிறார்: "சிந்து - கங்கை நதிக்கரையில் இசுலாமின் கொடியைப் பறக்க விட்டது புரட்சிகரமான அராபிய நாயகர்கள் அல்ல; இசுலாமுக்கு மதம் மாறியிருந்தவர்களும், ஆடம்பர வாழ்க்கையில் சீரழிந்து கிடந்தவர்களுமான பாரசீகர்களும், மத்திய ஆசியப் பகுதியைச் சேர்ந்த காட்டுமிராண்டிகளுமே ஆவர்."

பைசாண்டிப் பேரரசின் ஊழல், பாரசீகப் பேரரசின் கொடுங்கோலாட்சி, அறிவியலறிஞர்களைக் கொடுமைப் படுத்திய (கத்தோலிக்க) கிறித்துவத்தின் மூடநம்பிக்கை போன்ற அரசியல் - சமூகச் சூழல் மேற்கு ஆசியா மற்றும் அய்ரோப்பா பகுதிகளில் இசுலாம் தோன்றி நிலைபெறக் காரணமாயிருந் ததைப் போலவே, இந்து மதத்தின் வருணாசிரமக் கொள்கை, சாதிப் பிரிவினை, தீண்டாமை ஆகிய கொடுமைகள் இந்தியத் துணைக் கண்டத்தில் இசுலாம் வலுவடைய வழி செய்தன.

நடுநிலையில் நின்று எழுதப்பட்டுள்ள இந்நூலை இந்து மதவாதிகளும், இந்திய முஸ்லிம்களும் படித்து உணர்ந்தால் அவர்களது மதவெறி குறைய வாய்ப்புண்டு.

- நாஞ்சில்

படிப்பகம்

www.padippakam.com





# ஒரு மாறுபட்ட அரசா?


து. தில்லைவனம்

புதுதில்லியில் தற்போது ஆட்சி செய்து கொண்டிருக்கும் தேசிய மக்கள் நாயகக் கூட்டணி அரசாங்கத்தையும், அக்கூட்டணியில் பெரும் பங்கு வகித்துக்கொண்டு, கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் பாரதிய சனதாக் கட்சியையும், தலைமை அமைச்சராகவுள்ள அடல் பிகாரி வாஜ்பேயையும் குறிக்கிற ஒரு சொற்றொடர், "இது ஒரு மாறுபட்ட அரசு - A Government with a difference' என்பதாகும்.

ஆங்கிலத்தில் இது வெறும் மாறுபட்ட தன்மையை மட்டும் குறிப்பிடப் பயன்படுத்தப்படு வதில்லை. ஏனெனில் மாறுபாடு - பொதுத் தன்மையிலிருந்து வேறுபடுவது என்பது - நன்மை தருவதாகவும் இருக்கலாம், தீமை தருவதாகவும் இருக்கலாம்.

ஆனால் நன்மை, நல்லது, குறையற்றது, திறமையானது, செயலாற்றல் மிக்கது இந்த அரசு என்று குறிப்பிடும் பொருளில்தான் மாறுபட்ட அரசு என்னும் சொற்றொடர் இப்போது பயன்படுத்தப்படுகின்றது.

விரல்களின் வீச்சில் அடக்க முடியாத எண்ணிக்கையிலான கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமை ஏற்றுள்ள பாரதிய சனதாக் கட்சியை, அக் கூட்டணி நாடகத்தில் வேடமேற்ற ஒரே காரணத்திற்காகக் கூட்டணியின் மற்ற கட்சிகள் - அவற்றில் பெரும்பாலானவை ஓரிரு ஆண்டுகளுக்கு முன்புவரை கூட பாரதிய சனதாவின் மதத் தீவிரவாதத்தையும், பிற்போக்குத் தனத்தையும் மிகக் கடுமையாகச் சாடிக் கொண்டிருந்த தம் வரலாற்றையும் மறந்து - பாரதிய சனதாவை விண்முட்டப் புகழ்வதையே தங்கள் கட்சியின் தலையாய கொள்கையாகக்



கொண்டு விட்டவை போல நடந்து கொள்ளுகின்றன.

வாஜ்பேயி மிகப்பெரிய அமைச்சரவையை அமைத்துக் கொண்டுள்ளார். இப்படி அதிக எண்ணிக்கையில் அமைச்சர்களை நியமித்ததற்குக், கூட்டணி அரசு என்பது முதன்மைக் காரணமாகும்.

மய்ய அமைச்சரவையில் 27 கேபினட் அமைச்சர்களும், 36 இணை அமைச்சர்களும் உள்ளனர்.

ஒவ்வோர் இணை அமைச்சருக்கும் உதவி புரிய குறைந்த அளவு 11 அரசு அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். இந்த எண்ணிக்கை கூடுவதும் உண்டு; ஆனால் குறைவது இல்லை. மாநிலங்களில் உள்ள துறை இயக்குநர்கள் அல்லது மய்ய அரசின் துணைச் செயலாளர் நிலையில் உள்ள ஒருவர், சார்புச் செயலாளர் நிலையில் உள்ள இருவர், இரண்டு அல்லது மூன்று நேர்முக உதவியாளர்கள், இரண்டு மேல்நிலை எழுத்தர்கள், இரண்டு அடிப்படை ஊழியர்கள் மற்றும் ஊர்தி ஓட்டுநர்கள் அடங்கிய மாபெரும் ஊழியர் பட்டாளம் ஒவ்வொரு அமைச்சருக்கும் உதவி செய்யப் பொது மக்களின் வரிப் பணத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊதியம், பல்வேறு வகைப் படிகள், வசதியான குடியிருப்புகள், தொலைபேசி வசதி, ஆளை விழுங்கும் பயணப் படிகள், இலவச மருத்துவ வசதி போன்றவற்றை எல்லாம் ஏற்படுத்தித் தரவேண்டியுள்ளது.

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுபவித்து வரும் வசதிகளும், செய்யும் (அரசாங்க) பணச் செலவுகளும்; மன்னராட்சி நிலவும் நாடுகள் பலவற்றில் அந்தந்த நாட்டு மன்னர்களுக்குக் கிடைக்கும் வசதிகளை விட அதிகமானவை. ஓர் இணை அமைச்சருக்குத் திங்கள்தோறும் குறைந்தது 8 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்ய

www.padippakam.com



வேண்டியுள்ளதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

மேலும் அவர்கள் அனுபவித்து வரும் கடலன்ன மாளிகை, எண்ணற்ற சலுகைகள், நினைத்த நேரத்தில் இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் சென்றுவர இலவச விமான அல்லது குளிர் சாதன வசதியுடன் கூடிய முதல் வகுப்புத் தொடர் வண்டிப் பயணம் போன்ற சட்டப்படியான வசதிகள் - கணக்கற்ற இலவசத் தொலைபேசி வசதி, அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் நாளில் நாளொன்றுக்கு ரூ.7000/- மோட்டார் வாகன வசதி - அப்பப்பா! மயக்கமே வந்து விடும் போல் உள்ளது. இந்த ஏழை நாட்டு அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வசதிகளையும், சலுகைகளையும் கணக்கிட்டால்.

இவையேயன்றிக் கட்டணம் வாங்க வேண்டிய இடங்களில் கூட அமைச்சர்களுக்கும், ஏன் அவருடைய அலுவலகத்தினருக்கும் கூட, இலவசமாக வழங்கப்படும் சேவைகள், அன்பளிப்புகள் ஆகியவற்றைக் கணக்கிட்டால் ஒவ்வோர் இணை அமைச்சருடைய - அவருடைய அலுவலகத்தாருடைய - ஆண்டுச் செலவு சில கோடி ரூபாய்களாகின்றது.

சட்டத்திற்குப் புறம்பாய் நடப்பவர்களானால் இச் செலவு பன்மடங்காக ஆகின்றது. இவ்வளவும் ஏன்? இந்த நாட்டுத் தரித்திர நாராயணர்களுக்கு அமைச்சர்கள் சேவை செய்ய வேண்டித்தான்!

அவர்கள் என்ன சேவை செய்கிறார்கள் என்பதை முன்னிலால் என்னும் இணை அமைச்சர் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இவருக்குத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணை அமைச்சர் என்று பெயர். ஆனால் அவருக்கோ எந்த வேலையும் இல்லை.

தாம் பதவியேற்றது முதல் - இந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலத்தில் தான் ஒரே ஒரு அரசாங்கக் கோப்பைக் கூடப் பார்த்ததில்லை என்கின்றார். அதாவது அவர் செய்து கொண்டிருப்பதாகக் கூறப்படும் வேலைகள் அனைத்தும், அந்தத் துறைக்கான காபினெட் அமைச்சராலும் அவருடைய அலுவலகத்தாராலுமே மேற்கொள்ளப்பட்டு விடுகின்றன.


இவர் தன்னிடமுள்ள 'ஆள், அம்பு, சேனை, அரண்மனை' ஆகியவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்து கொண்டுள்ளார்? தன்னுடைய தொகுதி தொடர்பான வேலைகளை மட்டும்தான் அவர் இதுவரை பார்த்துக் கொண்டுள்ளார்.

இவ்வாறு வேலையில்லாத இணை அமைச்சர்கள், ஒருவர் இருவர் அல்ல 36 பேர்கள் பேன் குத்திக் கொண்டுள்ளனர்.

அவர்கள் வெறும் ஏனோதானோக்கள் அல்லர்! அவர்களில் சிலர் இந்திய ஆட்சிப் பணி (அய்.ஏ.எஸ்.) அலுவலர்களாகப் பணியாற்றிப், பின்னர் அரசியலுக்கு வந்து அமைச்சர்களானவர்கள். பெரும்பாலானோர் அரசியல் அனுபவமும், வேறு துறைகளில் அனுபவமும் பெற்றவர்கள்.

பின் ஏன் இந்த அவல நிலை? கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தத்திற்காகப் பலருக்கு அமைச்சர் பதவி தரப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கைக்கு ஈடுகட்டும் வண்ணம் பா.ச.க.விலும் அமைச்சர் பட்டாளம் உருவாக்கப்பட்டது.

தங்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருமாறு சுமித்ரா



மோகன் என்பவருடைய தலைமையில், வாஜ்பேயியிடம் தூது சென்றும் பார்த்து விட்டனர். இந்த வேலைவெட்டி இல்லாத அமைச்சர்கள். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை.

சிலர் தங்களுடைய சுய மரியாதையைக் காட்ட, இந்த வேலையற்ற அமைச்சர் பதவியை வீசி எறிந்து விடலாமா எனவும் எண்ணினர். ஆனால், அவ்வாறு செய்தால் தம் தொகுதி மக்கள் தம்மைத் தகுதி, திறமை அற்றவர் எனப் பழி தூற்றுவர் என எண்ணி வாளாயிருந்து விட்டனர்.

சுற்றமும், நட்பும் கிடைத்த வசதிகளைத் துறக்க முன் வராதது இதற்கு முதன்மையான காரணம்.

தகுதி, திறமை மிக்கவர்களின் ஆட்சியின் அலங்கோலத்தைப் பாருங்கள்.

இவ்வாறு ஓரங்கட்டப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர், காலங்காலமாக அரசியல் அதிகார மய்யத்துக்குச் செல்ல முடியாமல் தடுத்து வைக்கப்பட்ட பிரிவுகளைச் சார்ந்தவர்கள் என்பது 'வரிகளுக்கிடையே கிடைக்கும்' முக்கியச் செய்தியாகும்.

வாஜ்பேய் தலைசிறந்த 'இந்துத்துவா' தலைவர்தான் என்பதில் இன்னமும் அய்யம் உண்டோ?

படிப்பகம்

www.padippakam.com



## வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழாக்கள்

### ஜே.எஸ். ரசியா - வி. வித்யானந்தன்

பெரியாரியல் சிந்தனையாளர் தஞ்சை இரா. இரத்தினகிரியின் இளவல் மகள் ஜே.எஸ். ரசியா - சி. வித்யானந்தம் ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த விழா 8.4.2001 அன்று தஞ்சை வ.உ.சி. நகர் கவிதாலயா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் கோ.சரசுவதி தலைமையில், முனைவர் இரா.சக்கு பாய் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் விடுதலை க.இராசேந்திரன், கோவை கு.இராம கிருட்டிணன், முனைவர் க.நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலரும் வாழ்த்துரை வழங்கினர்.

### இளங்கோ - உமா மகேசுவரி

சிறந்த தமிழ்த் தேசிய உணர்வாளரும் ஓய்வு பெற்ற துணைப் பதிவாளரும் ஆகிய இரா. பத்மநாபன் - ப.கற்பகம் ஆகியோர் மகன் இளங்கோவன் - உமா மகேசுவரி; வாழ்க்கை ஒப்பந்த விழா, 5.4.2001 அன்று மதுரவாயல் பாக்கியலட்சுமி திருமணக் கூடத்தில் நடைபெற்றது. பா.இராமச்சந்திர ஆதித்தனார் தலைமையில், எம்.கே.டி. சுப்பிரமணியன் முன்னிலையில், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் திருமணத்தை நடத்தி வைத்தார். பெ.மணியரசன், வாலாசா வல்லவன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்

### மணிவண்ணன் - பத்மா மண விழா

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், மேத்தால் கோ.மதியழகன் எம்.காம். - டாக்டர் வசந்தா எம்.பி.பி.எஸ். ஆகியோர் இல்லத்தில் புதுமனை புகுவிழா, பெயர் சூட்டு விழா, திருமண விழா ஆகியவை 11.4.2001 அன்று நடைபெற்றன. செல்வி ம.அமுதா தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். செல்வி ம.அகதா எம்.ஏ. அனைவரையும் வரவேற்றார். விழாவுக்குத் தமிழகப் புலவர் குழு உறுப்பினர் தமிழ்மாமணி முனைவர் அ. ஆறுமுகம் தலைமை தாங்கினார். புலவர் மா.திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார்.

எம்.வி.ஏ. புதுமனையை அரியலூர் அரசு மருத்துவமனைச் சிறப்பு மருத்துவர் எஸ்.வானொலி எம்.டி . திறந்து வைத்தார். கணினிப் பொறிஞர் ம.ஆம்ஸ்ட்ராங் - இராசலட்சுமி ஆகியோரின் செல்வனுக்குக் குழந்தையின் கொள்ளுத் தாத்தா கோவிந்தசாமி படையாட்சியார், ஆதித்தன் எனப் பெயர் சூட்டி வாழ்த்தினார்.

பின்னர் கமலாம்பாள் - கந்தசாமி செல்வன் மணிவண்ணன், கோ.மதியழகன் - வசந்தா செல்வி பத்மா ஆகியோரின் மணவிழா நிகழ்ச்சியை விழாத் தலைவர் நடத்தி வைத்தார். அரியலூர் பேரூராட்சித் தலைவர் பொன். பக்கிரி உட்படப் பல நண்பர்கள் வாழ்த்துரை வழங்கினர். ம.ஆம்ஸ்ட்ராங் நன்றி கூறினார். தஞ்சை பாலமுருகன் பலகுரலிசை நிகழ்ச்சிக்குப் பின் நண்பகல் விருந்தளிக்கப் பெற்றது. இரவு இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மணமக்கள் சார்பாக சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு உருபா நூறு நன்கொடை அளிக்கப் பெற்றது.

## அரசு விருதுகளைத் திருப்பித் தந்த புதுவை அறிஞர் பெருமக்கள்

புதுவை அரசு அலுவலர்கள் அரசு ஆணைப்படித் தமிழில் ஒப்பமிடாத நிலை ஒரு திங்களுக்கு மேலும் நீடித்தால் - அரசு அளித்த (16 கிராம் பொற் பதக்கம், 15000 உருபாப் பரிசில், சான்றிதழ், பொன்னாடை ஆகியன அடங்கிய) 'தமிழ் மாமணி' விருதினைத் திருப்பித் தருவதாக முனைவர் இரா. திருமுருகன் அறிவித்திருந்தார். அதன்பின் அவருக்கே ஆங்கிலத்தில் எழுதி, ஆங்கிலத்தில் ஒப்பமிட்ட மடல்கள் பல அரசிடமிருந்து வந்தன. இது 'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போல இருந்தது. உயர் அலுவலர்களிடமிருந்து வேறு எந்த விடையும் வரவில்லை. எனவே இரா.தி. அவர்கள் 10.4.01 அன்று கலை பண்பாட்டுத் துறை இயக்குநரிடம் விருதினைத் திருப்பித் தருவதாக முன்னறிவிப்புச் செய்தார்.

இந்நிலையில், தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுவின் தலைவர், பேரா. ம.இலெ. தங்கப்பா அவர்கள், அரசு அலுவலர்கள் தமிழை வேண்டுமென்றே இழிவுபடுத்துவதைப் பொறாது, தமக்களிக்கப்பட்ட (8 கிராம் பொற்பதக்கம், 5000 உருபாப் பரிசில், சான்றிதழ், பொன்னாடை ஆகியன அடங்கிய) 'புதுவைக் கலைமாமணி' விருதினை 10.4.01 அன்றே திருப்பித் தருவதாக அறிவித்தார். அதன்படி 10.4.01 காலை 10 மணியளவில் த.வ.ந. குழு அலுவலகத்திலிருந்து 20க்கு மேற்பட்ட அமைப்பு களைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பேரணியுடன் ஊர்வலமாகச் சென்று 11.30 மணிக்குப் புதுவை அரசு கலை பண்பாட்டுத் துறை இயக்குநரிடம் புதுவை அறிஞர்கள் இருவரும் விருதுகளைத் திருப்பி யளித்தனர். வெல்க அறிஞர்களின் முயற்சி.

படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஏப்பிரல் - மே 2001

**சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியைச் சார்ந்த தோழர் செ. ஆனையப்பன் மற்றும் தோழர்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.2000/- வழங்கினர்.**

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 20.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக்கடல்-இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எறும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| லோ.இர.குமார் | சென்னை | 200.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 25.00 |
| ப.ம. அதியமான், ப.ம.மதிஒளி | | 100.00 |
| ப.தனஞ்செயன் - நா.சாந்தி | திட்டக்குடி | 50.00 |
| டி.என். ஏகாம்பரம் | பெங்களூர் | 100.00 |
| குயில்தாசன் | சோலையார்பேட்டை | 200.00 |
| அறிவுக்கடல் - இரஷ்யா திருமண மகிழ்வாக கவிஞர் தமிழேந்தி | அரக்கோணம் | 1000.00 |
| சண்முகநாதன் | சென்னை | 30.00 |
| மணிவண்ணன் - பத்மா திருமண நினைவாக கோ.மதியழகன் | குன்னம் | 100.00 |
| வ.அன்பழகன் - அஞ்சலி மகன் பிறப்பு மகிழ்வாக | பெரிய வெண்ணமணி | 100.00 |
| அரங்க தமிழ்மணி பணி ஓய்வு பெற்றதின் நினைவாக | திருவரங்கம்; | 500.00 |
| ராசா | அரபாக்கம் | 100.00 |
| பால்வண்ணன் | வடக்குமாங்குடி | 10.00 |
| ந.ப.அன்பழகன் | நமங்குணம் | 500.00 |

## அரங்க. தமிழ்மணி ரூ.1000 அளித்தார்.

திருச்சி மாவட்டக் கூட்டுறவுத் துறையில், 31 ஆண்டுகள் பணிமுடித்து, திருச்சி மாவட்ட (விநியோகத் துறை)த் துணைப் பதிவாளராக இருந்து, 31.3.2001 இல் ஓய்வு பெற்ற பெரியார் பெருந் தொண்டர் கீழப் பெரம்பலூர் அரங்க. தமிழ்மணி வளர்ச்சி நிதி ரூ.500/-, வாழ்நாள் கட்டணம் ரூ. 500 ஆக ரூ.1000/- அளித்துள்ளார். நன்றி

## தோழர் ச.அ. டேவிட் அவர்களின் 77வது பிறந்த நாள் விழா

தோழர் டேவிட் அவர்களின் 77வது பிறந்த நாள் விழா 2 4.4.2001 மாலை 7 மணிக்கு சேப்பாக்கம் சிந்தனையாளன் அலுவலகத்தில் சிறப்புற நடைபெற்றது. பல தோழர்கள் அன்னாருக்குப் பாராட்டுரை வழங்கினர். இறுதியில் டேவிட் ஏற்புரை வழங்கினார்.

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

## கவிஞர் தமிழேந்தி இல்லத் திருமணம்

### யு.இரா. இரஷ்யா (எ) கனிமொழி - அ.அறிவுக்கடல்

கவிஞர் தமிழேந்தி - இராணி ஆகியோரின் இளைய மகள் யு.இ ரஷ்யா (எ) கனிமொழி - அ. அறிவுக்கடல் ஆகிய இருவர் தம் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் 9.3.2001 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் திருச்சியை அடுத்த மண்ணச்சநல்லூர் கோபால் மகால் திருமணக் கூடத்தில் நடைபெற்றது. மணமகனின் தமக்கை கணவர் பசு.கவுதமன் அனைவரையும் வரவேற்றார். மணமக்கள் இருவரும் வாழ்க்கைத்துணை ஏற்பின் அடையாளமாகக் கணையாழி மாற்றிக் கொண்டனர். மணமக்களை வாழ்த்தி வே.ஆனைமுத்து, சீர்காழி மா.முத்துச்சாமி, சங்கமித்ரா, முனைவர் து.மூர்த்தி, க.முகிலன், இரா.இரத்தினகிரி, பெ.மணியரசன், தஞ்சை காளியப்பன், மா.ப.ஆறுமுகம், து.மா. பெரியசாமி, ந.பசுபதி மற்றும் காப்பீட்டுக் கழகத் தொழிற்சங்கத் தலைவர் ஆர்.கோவிந்தராசன் உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். மணவிழா நிகழ்ச்சிகளைத் தென்றல் தொகுத்து வழங்கினார். யு.இரா.பாவேந்தன் நன்றி கூறினார். விழாவில் பங்கேற்ற அனைவர்க்கும் தந்தை பெரியாரின் 'பெண் ஏன் அடிமையானாள் ?' நூல் பரிசாக வழங்கப்பட்டது. மணமக்கள் சார்பாக கவிஞர்தமிழேந்தி ரூ.1000 சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக அளித்தார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: ;852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618

## மே நாள்



விலைப்புள்ளி
ஏற்றம்
பங்குச் சந்தை
வீழ்ச்சி
தாராளமயம்
தனியார் மயம்
என
எத்தனையோ தகிடு
தத்தங்களுக்கிடையும்

ஆலை உழைப்புத்
தோழனின் வியர்வையும்
உழவன் வீட்டு
உப்புக் கண்ணீரும்
மதிக்கப்படுகின்ற
மகத்தான ஒரு நாள்
மேநாள் என்னும்
சிவப்புத் திருநாள்

'கடவுள்
தூணிலும் இருப்பான்
துரும்பிலும் இருப்பான்'
இறைத் தூதர்கள்
இப்படிப்
பொய்யே எழுதினர்

இதைத் திருத்தி
மெய்யே எழுதிய
மேதையே மார்க்சு!

இப்புவி இயக்கும்
ஆற்றலோன்
இறைவன் அன்று;
தொழிலாளத் தோழன்
மட்டுமே என்று
மொழிந்திட வந்த
மானுட வேதமே
காலங்கள் வென்ற
மூலதன நூல்

கதர்க்குல்லாய்
காவி அங்கி
மன்மோகன்சிங்
யஸ்வந்த்சின்ஹா
நிறங்கள் பெயர்கள்
வேறுவேறேனும்
வெள்ளை மாளிகை
அடிமை நாய்கள்
இவர்க்கும் சேர்த்த
விடுதலையைச்
சிவப்பின் விடியலில்
தேடுவோம்

## இனிச் சொல்லப் பழகுவோம்



சாஸ்திரி
சர்மா
முன்ஷி
முகர்ஜி
வடக்கே -
இன்னமும் இந்தச்
சாதி ஒட்டுகள்

இங்கும் முன்னர்
இருந்தன
வைக்கம் வீரர்
பெரியார் பிறந்தார்
தாடியோடு
தன்மானம் வளர்த்தார்
வால்கள் சுருண்டு
பெயருள் புதைந்தன

வாக்குப் பெட்டியில்
திராவிட நாடு
காணப் போன
கழகங்கள் இங்கே
கோட்டையைப் பிடித்தன
கொள்கையைப்
புதைத்தன
இன்று—
புதைந்தவை யெல்லாம்
மீண்டும் எழுந்தன

'சாதியை நானா
ஆதரிக்கிறேன்?
அரவணைத்தல்லவா
செல்கிறேன்'
முத்துவேலர் மகன்
முத்துக்கள் உதிர்க்கிறார்
கோயில் கோயிலாய்
ஏறி இறங்கி
யாகம் செய்பவர்
முதல்வர் ஆவதே
பெரியார் கொள்கைக்கு
யோகமென்று
'திடல் பூசாரி'
திருவாய் மலர்கிறார்

இதுவரைசொன்னோம்:
எம்ஜிஆர் நாமம் வாழ்க
அண்ணா நாமம் வாழ்க
இனிச் சொல்லப்
பழகுவோம்:
பெரியார் நாமம் வாழ்க!
மார்க்சு கொள்கை மலர்க!

**- தமிழேந்தி**

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்